தமிழ்த்தவம்

ஆக்கப்பணிகள் ஆயிரத்திற்கு ஓர் அறிமுகம்!

தமிழண்ணல்

தமிழ்த் தவம்

ஆக்கப்பணிகள் ஆயிரம் : ஓர் அறிமுகம்

தமிழண்ணல்
தமிழ்ச் சான்றோர் பேரவை
ஒருங்கிணைப்பாளர்

விற்பனையுரிமை

மீனாட்சி புத்தக நிலையம்

மயூரா வளாகம், 48, தானப்ப முதலி தெரு, மதுரை 625 001
தொலைபேசி : அலுவலகம் - 0452 - 2345971 வீடு - 2560517
மின் அஞ்சல் : meenakshiputhakam@hotmail.com

முதற்பதிப்பு : திருவள்ளுவர் ஆண்டு 2036 - கடகம் 12.8.2005

உரிமை பதிவு

விலை ரூ. 20

நூல் விவரம்

நூலின் பெயர்	:	தமிழ்த் தவம்
ஆசிரியர் பெயர்	:	தமிழண்ணல்
முதற்பதிப்பு	:	12.8.2005
தாளின் தன்மை	:	வெள்ளைத்தாள்
நூலின் அளவு	:	18 x 12. 5cm.
அச்சு எழுத்து அளவு	:	12 புள்ளி
மொத்தப் பக்கம்	:	68
நூலின் விலை	:	ரூ.20
அச்சிட்டோர்	:	மோனார்க் கிராபிக்ஸ், சென்னை
ஒளி அச்சுக் கோர்வை	:	ஐ கேட்சர், மதுரை

வெளியீடு

நற்றமிழவையம்

4/585 (732) சதாசிவ நகர் முதன்மைச்சாலை

மதுரை - 625 020

தமிழ்த் தவம்

'நல்ல சமயம் இது, தமிழை இனியும் நழுவவிடலாகாது'!

தமிழில் நான்கு, நாற்பது, நானூறு எனும் எண்கள், இச்லக்கிய வகையில் பெரும் செல்வாக்குப் பெற்றன. வழி வழி மரபுக்கேற்ப சென்ற தேர்தலில், இந்தியப் பாராளு மன்றத்திற்கு, நாற்பது தொகுதிகளிலும் வென்றது, வழி வழி வரும் வரலாற்றுச் சிறப்பை நினைவு படுத்துகிறது. இது எதனையும் சாதிக்கக்கூடிய வலிமையைத் தமிழ் நாட்டிற்குத் தந்துளது. இதனை நாம் ஒற்றுமையுடன் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்.

நாற்பதும் வென்றமைக்கு, அசைக்கமுடியாத ஒற்றுமையுடன் கூடிய, கூட்டணியே அடிப்படை. இதில் சிறு விரிவு ஏற்பட்டாலும் மீண்டும் எழுவது கடினமாகிவிடும். இக் கூட்டணியை வழிநடத்திய கலைஞர், அதே நெறியில், இன்னமும் தலைமை தாங்கி, அனைவரையும் அரவணைத்து, எஞ்சியுள்ள வெற்றிகளையும் பெற்றுத்தந்தால், வரலாற்றில் அனைவரும் ஒப்பற்ற இடம்பெற வாய்ப்புளது.

செயலிலல்லவா போட்டி வேண்டும்?

தமிழகம் மிகவும் எதிர்பார்த்தவை இரண்டு. ஒன்று சேது சமுத்திரத் திட்டம்; மற்றது தமிழ் செவ்வியல் மொழிக்கான அனைத்துத் தகுதிகளையும் பெறுதல்.

(பார்க்க : செவ்வியல் மொழி முதல், சேது சமுத்திரம் வரை : டாக்டர் வா.செ.குழந்தைசாமி) செவ்வியல் மொழியாக்குவதற்காகக் குரல் கொடுத்தவர்கள்; ஆய்வு நூல் எழுதியவர்கள்; கட்டுரை எழுதி, கவிதை பாடி, இடையறாது முயன்றவர்கள் மிகப்பலர். அது ஒரு வரலாறு. ஆனால் இன்றும் அதே வேலையாகச் சிந்திப்பவர் மணவை முஸ்தபா எனலாம்.

இத்திட்டங்கள் பற்றி நான்தான் சொன்னேன், தொடங்கினேன் என இதே வேலையாக, ஒருவருக்கொருவர் மனம்வேறுபடுமளவு, பேசி எழுதி வருவன தேவையற்றவை. இனி நாம் செய்ய வேண்டியவை பல உள. அதில் முயன்று உழைத்து உருவாக்குபவர்களே, வரலாற்றில் போற்றப்படுவர். ஒரு மாநாட்டில் நான்தான் குத்து விளக்கேற்றினேன்; நான்தான் வரவேற்றேன்; தொடக்கவுரை ஆற்றினேன்; நான் இல்லா விட்டால் மாநாடே நடந்திராது என்பதுபோல் பேசுவது இது. மாநாட்டின் பயன் என்ன என்றுதான் வரலாறு தேடும்.

இனிச் செய்யவேண்டிய பணிகள் நூறன்று, மேலும் உள. அவற்றிலல்லவா ஈடுபடவேண்டும். ‘செவ்வியல் மொழி’ - என அறிவிப்பதன்று வெற்றி. செவ்வியல் மொழிக்கான வளர்ச்சிகளைச் செய்வது; திட்டங்களை வகுப்பது; ஆக்கப்பணிகளில் உழைப்பது; அதற்கான தகுதிகளை அரசிடமிருந்தும் உலகெங்குமிருந்தும் அடைவது; தோன்றியநாள் முதல் செவ்வியல் மொழியாக இருந்தும், அது இந்திய மக்களாலும் உலகப் பேரறிஞர்களாலும் இன்னமும் முழுமையாக அறிய முடியாமலிருப்பதை நீக்க ஆவன அனைத்தையும் செய்வது

என இவ்வாறான பணிகள் மிகப்பலவுள. என்னைக் கேட்டால் ஒரு நூற்றாண்டளவுத் தொடக்கப் பணிகளே உள. அவற்றில் நம் கவனத்தைத் திருப்பவே இம் 'முன்வரைவு' நூல் வருகிறது.

தமிழே தெரியாதபோது தமிழில் எழுதிப் பயன்படுமா?

ஆர்ப்பாட்டத் துறையில் நாம் பெறும் வளர்ச்சிகள், ஆக்கத் துறையில் செயற்படுத்தப்படவேண்டும். எதிர்ப்புக்கள் அரசியலில் தரும் எழுச்சிகள் பல. ஆனால் அந்த எழுச்சி வெள்ளத்தை, நாம் ஆக்கப் பயிருக்குப் பாய்ச்சவேண்டும். அறுவடை கண்டு, பொங்கலிட வேண்டும். 'இந்தி ஒழிக' என்பதால் பெற்ற, மாபெரும் எழுச்சியைத் தமிழை வாழ வைக்க நாம் பயன்படுத்தியிருக்க வேண்டும். ஆங்கில எழுத்துக்களைக் கரிபூசி அழிக்கும் நாம் எதிர்காலத்தில் தமிழ் நிலைபெறுமாறு, இன்றைய அதன் இழிநிலைகள் நம் மாநிலத்திலேயே நடப்பனவற்றைக் களைந்தெறிய வேண்டும். இன்று தமிழ் எண் தெரியாமல், எழுத்துத் தெரியாமல், சொல்லும் தொடரும் தெரியாமல் - ஏன் - தமிழே படிக்க வராமல், எழுத முடியாமல் வளரும் பிள்ளைகள் பல நூறாயிரவர் உளர். நாளைக்கு அடுத்த பரம்பரையில், இவர்கள் தமிழ்ப் பெயர்ப் பலகைகளைப் பார்த்து, எங்களுக்கு இது தெரியவில்லை; ஆங்கிலத்தில் எழுதி வையுங்கள் என்று போராடும் நிலையல்லவா உருவாகிக் கொண்டிருக்கிறது?

இதுவரை எழுச்சியை வளர்ச்சியாக்கினோமா?

நல்லவை வளரவளரவே அல்லவை தேயுமென்றார் திருவள்ளுவர். நாம் அல்லாதவற்றை - தீங்குகளை எதிர்க்கிறோம்; கரிமை பூசுகிறோம்; பேரணி நடத்துகிறோம்; ஆர்ப்பாட்டம் செய்கிறோம். ஆனால் அதுநம் பணிகளுக்கான முன் முயற்சியே; அதன் தொடர்ச்சியாக நாமே அல்லவா உடனுக்குடன் ஆக்கப் பணிகளில் ஈடுபடவேண்டும். ஓரியக்கத்திற்கு இருபக்கங்கள் உள. ஒன்று எதிர்ப்பைத் தெரிவிப்பது; மற்றது ஆக்கத்தில் ஈடுபடுவது. நான் ஒன்று சொன்னால், யாரும் என்மீது பாய்ந்துவிடாதீர்கள்! நாம் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக எதிர்ப்புத் தெரிவித்து, எழுச்சியைக் கிளப்பி, நம் நன்மையைத் தேடி வாழ்ந்து வருகிறோம். ஆக்கப் பணிகளில் இம்மியளவு கூட ஈடு படாமல் கைவிட்டுவிட்டதோடு, தமிழின் அழிவுக்கும் வழி பல வகுத்து விட்டோம். ஆக்கப்பணிகள் கடினமானவை; உழைக்கவேண்டியவை; தன்னலத்தை மறக்கத் தூண்டுபவை; வறுமையிலும் சிலபோது வாடவேண்டியவை. எனவே தான் யாரும் வளர்ச்சிப் பணிகளில் ஈடுபடுவதில்லை.

மேடை முழக்கம் எளிது; சொற்பொழிவுக்கு எப் பொழுதும் ஆயத்தமே; கைதட்டல்களுக்குக் குறைவில்லை. நல்ல பேச்சாளர்கள், இதை ஒரு பயிற்சியாக்கி, தமிழை வணிகமாகக் கொண்டதை நான் குறை கூறவில்லை. அது அவர்கட்கு நன்மை; தமிழுக்கு என்ன நன்மை? முன்பு நடத்திய விழாக்களையும் கருத்தரங்குகளையும் மாநாடுகளையுமே திரும்பத் திரும்ப நடத்தி, கூடியவர்களே கூடி, பேசியதையே பேசி, கை தட்டியதற்கே கைதட்டி, பிரிந்தபின் எல்லாம் மறந்துபோவதே நம் வழக்கம்.

ஆர்வம்வேறு; ஆக்கம் வேறு

ஆக்கப்பணி என்பது வேறு. ஒருவர் நூல் எழுதுவது போலவே பலரும் நூல்கள் எழுதுவதும் ஆக்கப்பணியில் அடங்காது. தமிழை வாழ்த்திப் பாட்டுப் பாடிவிட்டாலும் அது ஆக்கமாகிவிடாது. ‘தமிழ் வாழ்க!’ என முழங்குவது மட்டுமே எவ்வாறு ஆக்கமாகும்? அவை எழுச்சிதரலாம்; ஆக்கமாகாது. பிறகு ஆக்கப் பணிகள் என்பனதாம் யாவை? சிறிய அளவினதான இந்நூலை முழுவதும் படியுங்கள். திரும்பத் திரும்பப் படியுங்கள். ஒன்றிரண்டையேனும் செய்ய முனையலாமா என எண்ணுங்கள். நம் பள்ளி மாணவர்ளிடம் கொடுத்து இதிலுள்ளவற்றை மனப்பாடம் செய்யச் சொல்லுங்கள். நம் இளையோர் மனம் ஆக்கப்பணி வழியில் திரும்ப இது உதவும். ‘வினைத்திட்பம் என்பது ஒரு மனத்திட்பம்’.

தொடக்க கால அடிமைநிலை

சமஸ்கிருதம் போல, தொன்றுதொட்டே தமிழும் செம் மொழிஆகியிருக்கவேண்டும். அன்றைய நிலை மிக மோசமானது. இங்கிருந்த உயர்கல்வியாளர்களில் சிலர் மட்டுமே தங்களை முழுமைத் தமிழர்களாக எண்ணிக் கற்று, எழுதி வாழ்ந்தனர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதலில் ‘சமஸ்கிருத சிரோமணி’ படித்தவர்களே தமிழ் வித்துவானுக்குப் படிக்கலாம். அதாவது முதலில் சமஸ்கிருதமே ‘நுழைவுத் தேர்வு’. விடுதலை பெறுமுன் இருந்த கொடுமை இது. பிறகுதான் தமிழ் வித்துவானுக்கு ('Tamil vidwan 2-D') என்று, நேரே தமிழ் படிக்க விட்டார்கள். 1940களில் ஏற்பட்ட மாறுதல் இது. முன்னதாக முதுகலைப்

பட்டமென்பது, எதுவாக இருந்தாலும் ஆங்கிலத்தில்தான் படிக்க முடியும். தமிழ் முதுகலையும் (M.A.) ஆங்கிலத்தில் படிக்கப் பட்டது. எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை எழுதிய Tamil Literature எனும் நூலை வாங்கிப் பாருங்கள். 1929 இல், ஆங்கிலத்தில் எழுதப்பட்ட தமிழ் இலக்கிய வரலாற்று நூல் அது. அதில் 1896 முதல் 1911 வரை கேட்கப்பட்ட மாதிரி வினாக்கள் (M.A. Questions) 118 ம் ஆங்கிலத்தில் இருப்பதைக் கண்டால் வியப்படைவீர்கள். இதைக் கூட, அன்றையநிலை என ஏற்றுக் கொள்ளலாம். சமஸ்கிருதம் படித்தபிறகே, தமிழ் படிக்கலாம் என்றிருந்த சென்னைப் பல்கலைக்கழக நிலை மிகவும் கொடுமையானது. ஆங்கிலேயர்களே துணை வேந்தர்களாக இருந்தபொழுது, அவர்களுக்கு வால்பிடித்த சிலரின் கை ஓங்கியிருக்கவே, தமிழறிஞர்கள் தலைகுனிந்தே வாழ்ந்து, பழக்கப்பட்டுப் போயினர்.

இன்னொரு சான்றும் காட்டலாம். மலேயா அரசு அங்கு பல நூறாயிரம் தமிழர்கள் வாழும் நிலையில், தமிழ்ப்படிப்பை ஏற்படுத்த, ஒரு திட்டம் வகுத்துத் தருமாறு இங்கிருந்த இந்திய அரசைக் கேட்டது. வரலாற்று அறிஞர் கே.ஏ.நீலகண்ட சாத்திரியார் தனிமனிதர் குழுவாக (One man commission) அனுப்பப்பட்டார். அவர் அங்குபோய் ‘இந்திய மொழியாக சமஸ்கிருத மொழியைப் பாடமாக வைக்கும்படி’ - அறிக்கை கொடுத்துவிட்டு வந்துவிட்டார். பல நூறாயிரம் தமிழர்கள் வாழ்வதறிந்தும், யானை அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் என்னும் பழ மொழிக்கு ஏற்பச் செய்ததுடன் தமிழ்ப் படிப்பைப் பற்றி ஒரு வரி எழுதினாரில்லை.

காலமெல்லாம் உறங்கிக் கழித்தோம்

அதனால் அங்கு தமிழ்த்தலைவர்கள் போராடியும் அது தமிழ்த்துறையாகத் தொடங்கப்படாமல் 1957-இல் இந்திய ஆய்வுத் துறை என்ற பெயரில்தான் தொடங்கப் பட்டது. தமிழுடன் சமஸ்கிருதமும் முக்கியபாடமானது. அப்பொழுது அங்கு இந்திய ஆணையராக (Commissioner For India in malaya) இருந்த ஆர்.கே.தாண்டன் என்பார், இந்திய அரசின்சார்பாக ரூ ஆறாயிரமும், எழுபது சமஸ்கிருத நூல்களையும் அத்துறைக்கு அன்பளிப்பாக வழங்கினார். அன்றைய ஆட்சியில் தமிழ் புறக்கணிக்கப் பட்டதற்கு யார் காரணம்? தமிழர்களின் உறக்கமே காரணம்.

மேலும் ஒரு சான்றும் பார்க்கலாம். சென்னைப் பல்கலைக் கழகம், ஆங்கிலேயர் தலைமையில் இயங்கிய தால், ஒரு சிலர் தமிழைச் செம்மொழி என அறிவிக்க விடாது தடுத்தனர். பாடத்திட்டம் போன்ற அனைத்திலும் தமிழகப் பல்கலைக் கழகம் தமிழைத் தரந்தாழ்த்தி, மதிப்பிட்டு நடத்தியதை, வி.கோ.சூரிய நாராயண சாத்திரியார் இவ்வாறு மனம் நொந்து எழுதுகின்றார்.

> 'இனி இது நிற்க, தமிழ் நாட்டில் ஆங்கில வரசாட்சி ஏற்பட்ட பின்னர்த் தாய்மொழியாகிய தமிழை அதன் வழி மொழிகளாகிய தெலுங்கு கன்னட மலையாள துளுவங்களோடு அடக்கி 'உள்நாட்டு மொழிகள்' என வகைப்படுத்தினர் சிலர். தனிமொழி ஒன்றை அதன் வழிமொழிகளோடு வகைப் படுத்தலாமோ? அது முன்னதனை இழிவுபடுத்ததாகாதோ?
>
> ஆரியமொழிகளுள் தலைநின்ற வடமொழியை அதன் பாகதங்களோடு ஒருங்குவைத்து எண்ணத் துணியாமை

போலத் தமிழ்மொழியையும் அதன் வழிமொழிகளோடு ஒருங்கு வைத்து எண்ணத் துணியாதிருத்தலே அமைவுடைத்தாம்.

இவ்வாறாகவும் நமது சென்னைச் சர்வகலா சாலையார் மேற்கூறியாங்கு, தமிழை இழிவுபடுத்தி வகுத்தபோதே, தமிழராயினார் முற்புகுந்து, அவ்வாறு வகைப்படுத்தல் சாலாதென மறுத்திருக்க வேண்டும். அப்போழ்தெல்லாம் வாய்வாளாமை மேற்கொண்டிருந்துவிட்டனர் தமிழ் மொழியாளர்.''

இவ்வாறு அன்றுமட்டுமன்று, இன்றும் அவ்வாறே இருக்கின்றோம். அன்றே தமிழைச் செவ்வியல்மொழி ஆக்குமாறு, ஆங்கிலேயர்களுக்கு அறிவுறுத்திப் பெற்றோமில்லை. அன்றும் ஆங்கிலம் கற்ற தமிழர்கள் தங்களை ஆங்கிலேயர் என்றே கருதிக் கொண்டு, தாய் மொழியாம் தமிழைப்பற்றி எட்டுணையும் எண்ணிப் பார்த்திலர்.

ஆகவே தென்னாட்டின்கண் சிறந்தொளிராநின்ற அமிழ்தினு மினிய தமிழ்மொழி எவ்வாற்றான் ஆராய்ந்த வழியும் 'உயர்தனிச் செம்மொழியே' யாம் என்பது நிச்சயம். இவ்வளவுயர்வுஞ்சிறப்பும் வாய்ந்த அருமைத் தமிழ்மொழியை உண்ணாட்டுப் புன் மொழிகளோடொருங் கெண்ணுதல் தவிர்த்து, வடநாட்டுயர் தனிச் செம்மொழி சமஸ்கிருதமெனக் கொண்டாற் போலத் தென்னாட்டுயர் தனிச்செம்மொழி தமிழெனக் கொண்டு புகுதலே ஏற்புடைத்தாம்'' (தமிழ் மொழியின் வரலாறு)

இன்றைக்கு எண்பதாண்டுகளுக்கு முன்னரே, நாம் அடைந்திருக்க வேண்டியதை இன்றுதான் பெற்றுள்ளோம்.

நடுவணரசு நழுவுவதன் காரணங்கள் யாவை?

இன்றைக்கு நடுவணரசு நமது துணை தேவைப் படுவதால் 'ஏனோ தானோ' என்றுதான் அறிவிக்க முடிந்துளது. வெளிநாட்டு மொழிகளுக்கான இந்திய ஆணையம் ஒன்றை ஐதராபாத்திலும் இந்திய மொழிகளின் வளர்ச்சிக்கான ஆணையம் ஒன்றை மைசூரிலும் இந்திய அரசு நியமித்தது. கன்னடர்கள் மிகவும் துடிதுடிப்பானவர்கள். அங்குள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் முதல் ஆங்கில மொழி மற்றும் பிறதுறை வல்லுநர்கள் யாவரும் கன்னட மொழி வளர்ச்சி மட்டுமன்றி, முக்கியமான இந்திய அரசு நிறுவனங்களை எல்லாம் தமது மாநிலத்திற்குக் கொண்டு போவதிலேயே கண்ணுங்கருத்துமாக இருப்பவர்கள். நம்மவர்களோ இவ்வகையில் 'உறக்கம் கலையாமலே' - 'யாதும் ஊரே' எனத் தாலாட்டுப் பாடுவார்கள்!

முதலில் இவ் ஆணையம் சென்னையில் அமைவதாக இருந்தது. மந்திர தந்திரம் செய்து மைசூருக்குக் கொண்டு போனார்கள். முன்னமேயே 'லலிதகலா அகாதெமியைக்' - களவு கொண்டு போவதுபோல், அங்கே கொண்டு போனார்கள். உதகமண்டலத்திலிருந்த கல்வெட்டு மற்றும் பழஞ்சுவடித்துறையும் மைசூருக்குத் தூக்கிப் போகப் பட்டது. நம்மைப்பற்றிய கல்வெட்டு ஆய்வுகளுக்கும், நாம் மைசூருக்குத்தான் போயாக வேண்டும். பிறகு நாம் பொருத்தமான இடம் தராததால், சாகித்திய அக்காதெமிக் கிளை 35 ஆண்டுகளுக்கு மேல் சென்னையிலிருந்ததைப் பெங்களூருக்குக் கொண்டு போய் விட்டார்கள். கேவலம் ஒரு கிட்டங்கி மட்டும் சென்னையில் இருக்கிறது.

உண்மையிலேயே கூடுதலான நூல்கள் வெளிவருவதும் விற்பனையாவதும், இந்திக்கு அடுத்துத் தமிழில்தான். யாரோ ஒருவன் சொன்னானாமே, பெட்டகம் களவு போனால் என்ன, திறவுகோல் என்னிடம் தானே இருக்கிறது என்று. அதே போன்ற நிலைதான் நம் தலைவர்களிடமும் இருக்கிறது. பலருக்கு இது போன்ற விவரங்களே தெரியாது.

இன்னமும் வடநாட்டுத் தலைவர்கள் நமக்கு மனம் இரங்கி வழங்குபவர்களும் நாம் அவர்களின் தயவில் வாழ்பவர்களும் போன்ற மனநிலைதான் இருக்கிறது. நம் தலைவர்களின் உணர்வு நிலையே இதைத்தான் 'பிரதி பலிக்கிறது'. 'சமவுரிமை உடையவர்கள்' போன்ற மனநிலை நம் தலைவர்கள் எவரிடமும் இல்லை. ஓரளவாவது அவர்கள் தம்மை மதிக்க வேண்டிய நிலை, நாம் பெற்ற அரசியல் வெற்றியால் முகிழ்ப்பதேயாம். அறுதிப் பெரும் பான்மை கிடைத்தால், அவர்கள் நம்மைத் திரும்பியும் பார்க்கமாட்டார்கள்.

அன்றும் இராசகோபாலச்சாரியார் வடநாட்டுத் தலைமைகளால் புறக்கணிக்கப் பட்டதாலல்லவா, சுதந்திராக் கட்சி என்று ஒன்று தொடங்க நேரிட்டது. இந்தியைத் திணித்த அவரே, பிறகு அதை எதிர்க்க நேர்ந்தது.

மைசூரிலுள்ள தமிழ்வளர்ச்சிப் பகுதி, முன்னமே இருப்பது தான். புதிதாக எதுவும் வழங்கவில்லை. அங்கு இந்திய மொழிகளுக்கெல்லாம் துறைகள் உள. தமிழுக்கு இனி 'வளர்ச்சித் துறை' அமையப் போவதும் எட்டுத் தமிழறிஞர் சிறப்பிக்கப் படுவரென்பதும், பிற மொழிகளுக்கும் கிடைக்கும் என்பது உறுதி. தமிழகத்தில்

தமிழ் வளர்ச்சித் துறை அமையாமல், அங்கு அமையும் என்பதிலேயே 'சூட்சுமம்' எல்லாம் அடங்கிப் போயுள்ளது. நடுவணரசு என்ன செய்யும்? எல்லாரையும் மனநிறைவு படுத்தி ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம். அவர்களால் அறிவிக்க முடிந்ததோடு சரி; நாம்தான் துடிதுடிப்பாய், 'நாடொறும் நாடி', தமிழின் ஆக்கப்பணிகளில் முழுமூச்சுடன் ஈடுபடவேண்டும்.

தமிழன்னையின் குரல் கேட்கிறதா? தமிழர்களாகிய நாம் தமிழை மதித்தாலல்லவா உலகம் தமிழை மதிக்கும்?

"தமிழா, தமிழா! நீ தமிழால் வாழ்ந்தாய்! உன்னைத் தமிழ் வாழ்வித்தது! நீ தமிழுக்கு என்ன செய்தாய்! உன்னால் தமிழுக்கு ஏற்பட்ட பயன்களில் ஒன்றைச்சொல்! (இது தமிழன்னையின் குரல்; கேட்கிறதா?)

'பிறமொழி ஆதிக்கத்திற்கு இடங்கொடோம்' - எனத் துடித்தெழுந்த, உன் முன்னோர்களை நினைத்துப்பார்! இன்று பிறமொழிகள் உன்மீது 'பச்சைக் குதிரை' ஏறி விளையாடுகின்றனவே. என்று நீதலை நிமிரப் போகின்றாய்?

நம்மைத் 'தமிழ்' (Tamils) என்றுதான் உலகிலுள்ள ஒவ்வொருவனும் சொல்கின்றான். நீயோ உன் பெயரை, மொழியை, பண்பாட்டை, நாகரிகத்தை இழக்க முனைந்து விட்டாய்! அடையாளத்தையே இழந்துவிட நினைக்கும் தமிழ் மகனே; புலியாய் இருந்தவன் கூனிக் குறுகிப் பூனையாகிவிடப் பார்க்கிறாயே; பொருந்துமா?"

நாம் தமிழைப் பேசுவதால் வாழ்கிறோம். பிறந்ததும் 'மா' எனக் கூவி அழுதோமே? தமிழ் பல ஆயிரம் ஆண்டுகளாக நம் குருதியில் கலந்த ஒன்றல்லவா? தமிழில் எழுதினோம்; தமிழில் முழங்கினோம்; தமிழால் ஆட்சி பெற்றோம்; தமிழால் இன்று உலகை வலம்வரும் பதவி ஏணிகளில் ஏறுகிறோம்; நம்மில் ஒவ்வொருவரும் தமிழால் ஏதேனும் ஒரு பயன் அடைந்துள்ளோம்; அடைகின்றோம்.

'இந்தி' ஒன்றுமட்டும் மேலாண்மை செய்யக் கூடாது. இந்திய மொழிகள் அனைத்தும் 'சமமாக' மதிக்கப்பட வேண்டும். இந்திய அரசமைப்புச் சட்டத்தின், எட்டாம் அட்டவணைப்படியான அனைத்து மொழிகளும் இந்தியத் தேசிய மொழிகளே. அவை தனித்தனி வாழ வைக்கப்பட வேண்டும்; வளர்க்கப்பட வேண்டும். இவற்றிடையே சிறு ஏற்றத்தாழ்வும் கூடாது.

'ஆங்கிலமும்' இந்திய மொழிகளில் ஒன்று என்று, தலைமை அமைச்சர் கூறுகின்றார். தொடர்பு மொழியாக அது நீடிப்பதும், இந்திய ஒருமைப் பாட்டிற்கு உதவும். விடுதலை பெற்ற நாட்டில் பிறந்த, மானமுள்ள ஒருவன் பிறிதொரு மொழி, தன்னை ஆள்வதையும் அடிமைத் தனம் என்றே வெறுப்பான்.

ஈழத்தில் விடுதலைப் போர் வெடித்தது ஏன்?

ஈழத்தில் வெடித்த விடுதலை முழக்கமும் அதுதான். அடிமைப் படுத்தப் பட்டவனுக்கல்லவா, அதன் கொடுமை ஆழ்நெஞ்சில் பதியும். அடுத்தவனுக்கு அதைப்பற்றி என்ன தெரியும்? 'தலைவலியும் வயிற்றுவலியும் தனக்கு

வந்தால் தெரியும்' என்பார்கள். தாய் மொழியுணர்வும், அடிமைப்படுத்தப் படுபவனுக்குத்தான் தெரியும். அடுத்தவனை நம்பி என்ன பயன்?

ஒன்றை நினைவூட்ட விரும்புகின்றேன். கரவை கிழார் கந்தசாமி என்ற, ஈழத்துப் பெரியவர், கோவை யிலிருந்தார். அவர் பிள்ளைகள் ஆஸ்திரேலியாவிலும் ஐரோப்பாவிலும் சிதறிக் கிடந்தனர். அவர் ஒரு கவிஞர். சில ஆண்டுகளுக்கு முன் அவர் என்னைக் காண, கோவையில், என்மகள் வீடுதேடி வந்தார். அவர் ஈழத்தில் அரசு அலுவலில் இருந்தவர். திடீரெனச் சிங்களமே அரசு மொழி, ஆட்சிமொழி, அதைப் படித்தால்தான் சம்பள உயர்வு, பதவிஉயர்வு எனக் கொடுமைப் படுத்தினராம். அது பொறுக்காது வேலை இழந்த அவர், ஈழ விடுதலை பற்றி, அங்கு புரட்சி வெடிக்கு முன்பே, தாம் எழுதிய கவிதை நூலை அச்சேற்றச் சென்றுள்ளார். ஈழத்து அச்சகத்தாரே, அந்த 'விடுதலைப்' பாட்டை எடுத்தால்தான் நூலை அச்சிட முடியும் என மறுத்துவிட்டனராம். இக்கொடுமையை அவர் விவரித்த பிறகுதான், அங்கு புரட்சி ஏன் வெடித்தது எனப் புரிந்தது.

நம் விழிப்புணர்வு, எழுச்சி, ஆர்ப்பாட்டம், போராட்டம் எல்லாம் ஆங்கிலத்தை எதிர்த்தா? ஆங்கிலம் வேண்டாம் என்றா? அடபாவிகளே! உங்களுக்குத் தமிழ் நெஞ்சம் என ஒன்று இல்லையா?

இன்று உங்கள் வீட்டிலும், எதிர்வீட்டிலும், பக்கத்து வீடுகளிலும் உள்ள இளம் பிஞ்சுக் குழந்தைகளை அழைத்துப் பேசிப் பாருங்கள். அ, ஆ, இ, ஈ - என்று தமிழ் நெடுங் கணக்கு வரிசையாக வருகிறதா? தமிழில் ஒன்று, இரண்டு,

மூன்று சொல்லத் தெரிகிறதா? ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்து எட்டு எங்கே, விளங்குகிறதா? என்று கேளுங்கள்? தமிழில் ஒரு தொலைபேசி எண்ணைக் கூறுங்கள். - அதை எழுதச் சொல்லுங்கள். தமிழில் 'வாய்பாடு' கேளுங்கள். தமிழில் நிறப்பெயர், கிழமைப்பெயர், காய் கறிப் பெயர், சுற்றுச்சூழல் பெயர் - இவற்றில் அனைத்தையும் ஆங்கிலத்தில்தான் சொல்வர்; அவ்வாறு சொன்னால்தான் விளங்கும் என்பர்.

தாய்த் தமிழை அவமானப் படுத்தலாமா?

"The students should not speak in non - English, inside the campus. if they speak in non - English, they should be punished with Rs.5, and this will be recorded in their progress report".

சென்னையிலுள்ள 'மெட்ரிக்' பள்ளி ஒன்றின் சுற்றறிக்கை இது.

பிறமொழி கற்பதற்கு ஒருநெறிமுறை இல்லையா ?

''வீட்டில் பெற்றோர் தங்கள் குழந்தைகளிடம் ஆங்கிலத் திலேயே உரையாடவேண்டும். பள்ளியில் வந்து பேசும்போது, அவர்கள் குழம்பிப் போகின்றனர். அதனால் எங்கள் பள்ளியில் படிக்கும் குழந்தைகளிடம் வீட்டிலும் ஆங்கிலத்திலேயே பேசுங்கள்'' - கோவை 'மெட்ரிக்' பள்ளி ஒன்று பெற்றோர்க்கு அனுப்பிய சுற்றறிக்கை இது. பெற்றோர் சங்கக் கூட்டத்திலும் வலியுறுத்தப் பட்ட 'அறிவுரை' இது . பள்ளியில் சேர்க்குமுன், பெற்றோர்க்கு ஆங்கிலம் தெரியுமா எனக் கேட்டுவிட்டு, இடம்தரும் தறுதலைகளும் பலவுள.

தமிழைச் சிலுவையில் அறைவது புனிதமாகுமா?

புனிதச் சிலுவைப் பெயரால் நடக்கும் ஒரு பள்ளியில், பாதிரியாராம் ஆசிரியர், மேடை ஏறி, ''பள்ளி வளாகத்திற்குள் தமிழில் உரையாடினால், அல்லது பேசும்போது இடையே தமிழ் வார்த்தைகள் வந்தது தெரிந்தால், அம் மாணவனுக்கு நூறு ரூபாய் தண்டம் விதிக்கப்படும்' என முழங்கியுள்ளார். அன்று ஏசுவைச் சிலுவையில் அறைந்தது போதாது என்று, இன்று இவர் தமிழன்னையைச் சிலுவையில் அறைய முயல்கிறார். மதுரைப் பள்ளி ஒன்றில் ஓர் அறிவியல் கண்காட்சி நடந்தது. மாணவர்கள் பார்க்க வரும் தமிழ் மக்களிடம் ஆங்கிலத்திலேயே விளக்கவேண்டும், தவறினால் நூறு ரூபாய் அபராதம்! வானொலி நிலைய இயக்குநர், ''நீ சொல்வது எனக்கும் விளங்கவில்லை. உனக்கே விளங்கியதா என்றும் தெரியவில்லை. சிறிது தமிழிலும் சொல்வாயா?'' - என்று எவ்வளவு கெஞ்சிக் கேட்டும், அப்பெண் வாய் திறக்கவில்லை. அண்மையில் நடந்தது இது.

இங்ஙனம் நூற்றுக்கணக்கில் தமிழ் 'நான்காம் சாதிப் பாஷை'; சூத்திர பாஷை; தீண்டத்தகாத பாஷை; பேசினால் இழிவு தரும் மொழி - ஒரு தாழ்ந்த, இழிந்த, கேடுகெட்ட மொழி என்ற தாழ்வு மனப்பான்மை ஏறத்தாழ ஒரு கோடி, இளம் தமிழ்நெஞ்சங்களில் நாள்தோறும் விதைக்கப்படுகிறது. இந்நிலையில்தான் தமிழ் 'செம் மொழி' ஆகிவிட்டது!

இதுவா ஆங்கிலம் கற்பிக்கும் - கற்கும் நெறி? இப்படிப் படித்தால்தான் ஆங்கிலம் வருமா? பத்தாம் வகுப்புவரை ஆங்கிலத்தை ஒரு மொழிப்பாடமாக மட்டும்

கற்றவர்கள், பிறகு அவ்வாறு கற்ற ஆங்கிலத்தின் மூலம் உலகை வலம் வர முடிகிறதே? சந்திரசேகரன் - என்பார், ஆங்கில நாளேடு ஒன்றில், தாம் பள்ளி இறுதி வகுப்புவரை ஆங்கிலத்தை ஒரு மொழிப் பாடமாக மட்டுமே படித்து, இன்று ஆங்கில வல்லுநராகியமை பற்றி, ஆங்கிலத்தில் செவ்விய கட்டுரை ஒன்றை எழுதியிருந்தாரே? பள்ளியிறுதி வரை வங்காளமே பயின்று, ஆங்கிலத்தை ஒரு மொழிப் பாடமாகக் கற்று, உலகிற் சிறந்த நோபல் பரிசைப் பெற்றவர்கள், பள்ளியில் தப்பித் தவறித் தாய்மொழியில் பேசியதற்காகத் தண்டிக்கப் பட்டவர்கள் அல்லவே? நோபல் பரிசு பெற்ற பிறகும் அவர்கள் வங்காள மொழியை நேசித்ததை, வரலாறு சொல்கிறதே?

ஆங்கிலம் படிக்க வேண்டும் என்று புலம்பும் அறிஞர்களே! தமிழை அறவே புறக்கணிப்பது பற்றி வாய்திறவாமை ஏன்? இதையும் தமிழில் முழங்க வெட்கமாக இல்லையா?

''ஆங்கிலத்தை ஆங்கிலமாகப் படியுங்கள். ஆங்கிலத்தில் உலக அரங்கில் பேசுமளவு, ஒரு தொடர்பு தருமொழியாகப் படியுங்கள். ஆங்கில வல்லுநராக ஆகுங்கள்.

ஆனால் அதற்காகத் தாய்த் தமிழைப் புறக் கணிக்காதீர்கள். உங்கள் அடையாளத்தை, பண்பாட்டை இழந்துவிடாதீர்கள். தாய் மொழி வல்லுநராக ஆனபின், பிறமொழிகற்பது எளிது. முதலில் தாய்மொழி அடிப் படையை வலிமையுடன் கட்டுங்கள்; அதன்பின் ஆங்கிலக் கோட்டையை வேண்டுமேல் அதன்மேல் கட்டிக்

கொள்ளுங்கள். தமிழை அறவே புறக்கணித்து விட்டு, தமிழே தெரியாமல், தமிழைத் தாழ்வாக ஒதுக்கித் தள்ளிவிட்டு, ஆங்கிலத்தை நுழைப்பது தண்டிக்கப் படவேண்டிய குற்றம்'' - இவ்வாறல்லவா முழங்க வேண்டும்? இவர்கள் தமிழ் புறக்கணிக்கப் படுவது பற்றி ஒரு வார்த்தை பேசுவதில்லையே, ஏன்? தமிழ் இழிவு படுத்தப்படலாகாது, அவமானப் படுத்தப்படலாகாது என்று ஒரு வார்த்தை, சொல்வதில்லையே, ஏன்?

பரிதிமாற் கலைஞர் என்று முதன்முதலில் வட மொழிப் பெயரைத் தமிழாக்கிக் கொண்ட, வி.கோ.சூரிய நாராயண சாத்திரியார், தமது தமிழ் மொழியின் வரலாற்று நூலில் எழுதியுள்ள பகுதி ஒன்றையே மீண்டும் எண்ணிப் பார்க்க வேண்டியுளது. அறுபது, எழுபது ஆண்டுகளுக்குப் பிறகும் நிலைமை மாறவில்லை என்பதை, நீங்களும் உணர்வதற்காக அதனை இங்கு எடுத்துத் தருகின்றோம்:

> ''இக் காலத்தில் ஆங்கில பாஷை கற்ற தமிழ் மக்களில் பலர், தமது தாய்மொழியாகிய தமிழைப் படிக்க வேண்டுவது அவசியமன்று என்றும் தமக்கு வேண்டிய விஷயங்கள் யாவும் ஆங்கிலத்திலேயே அகப்படுகின்றன என்றும் பலதிறப்படக் கூறுவர். அவர் ஆங்கில மொழிச் சிறப்பு மட்டிற் கூறி அமைவதே நன்றாகுமன்றித் தமிழ் கற்கவேண்டியதவசிய மன்று என்பது அறியாமையோடு கூடிய துணிந்துரையாம். இது சுதேசாபி மானமும் சுபாஷாபிமானமும் அற்றவர் கூற்றாம், இவ்விரண்டும் மிக்க ஆங்கிலர் இவ்விரண்டும் அற்றவர்களை எவ்வாறு மதிப்பரோ? ஆங்கிலம் முதலிய பிற பாஷைக்கு உரியவராய் அப்பாஷைகள் வல்லுநரெல்லாம் தமிழ் மொழியின் மீது ஆர்வமுடையராய்த் தமிழைக் கற்றும் தமிழ் நூல்களைத் தங்கள் பாஷைகளில் மொழிபெயர்த்துக் கொள்ளுதலை,

உற்று நோக்கியாதல் தமிழ்க்கல்வி அவசியமன்று என்பார்க்குப் புத்தி வரட்டும்''

பிஞ்சு நெஞ்சில் நஞ்சைப் புகுத்தலாமா?

அக் 'கலைஞர்' இன்று இருந்தால், பெரியவர்களிடம் மட்டு மன்றி, பிஞ்சு நெஞ்சங்களிலும் இந் நஞ்சு புகுத்தப் படுவதைக் கண்டு, எவ்வளவு கடிந்துகொள்வாரோ, நாமறியோம்.

ஆங்கிலம் வேண்டுமென்று 'சத்தியம்' செய்து கொடுக்க வேண்டுமா? இந்தியை எதிர்ப்பதாகக் கூறி, தமிழை அழித்தது போதாது என்று, ஆங்கிலத்தை வேண்டுமென்று கூறி, தமிழுக்கு ஆழக் குழி தோண்டு பவர்களை என்ன சொல்வது? இதனை எண்ணிப் பார்க்க யாருமில்லையே? மம்மியும் டாடியும் அங்கிளும் ஆண்டியும் தான், ஆங்கிலத் தேர்ச்சியின் அறிகுறியா?

செவ்வியல் தமிழை உலகறியச் செய்வது யார் கையில் இருக்கிறது?

செவ்வியல் தமிழை முழுவதுமாக விளங்கிக் கொள்வதும், விளக்கிச்சொல்வதும், பாரதநாடும் உலகும் ஏற்கச் செய்வதும் நம் கையில்தான் உள்ளன.

தலைமை அமைச்சர் மன்மோகன்சிங்கும் தலைவர் சோனியா காந்தியும் அறிவிக்கலாம்; பாராட்டலாம்; கோடி காட்டலாம். ஆனாலும் அதில் குறைகளிருந்தால் அதைச் சரி செய்கின்ற சாதுரியமும் நம்மிடமே வேண்டும். அதற்கும்மேலே அதற்குரிய தகுதியை - மதிப்பை -

உயர்வை - செம்மையை - செப்பத்தை - தனித்தன்மையை- தனிச்சிறப்பை நாம்தான் எடுத்துரைக்க வேண்டும். நாமே, நம் மக்களே, நம் தலைவர்களே, தொண்டர்களே ஏன், நாம் அனைவருமே அறியவேண்டியவை இவை.

இந்தியப் பெருமொழிகள் ஒன்பது : தமிழும் ஆங்கிலமும் தவிர்த்து மலையாளம், கன்னடம், தெலுங்கு, வங்காளம், குசராத்தி, மராத்தி, இந்தி. இம்மொழிகளில் எல்லாம் ஏற்கும்படியான வளமான தொன்மையுடன் கூடிய செவ்வியல்மொழி தமிழ். இதனை அவர்கள் அறிய நாம் இதுவரை என்ன செய்தோம்?

நாம் எழுபத்தைந்து விழுக்காடு முயன்று, உழைத்தால் நடுவணரசு இருபத்தைந்து விழுக்காடு உதவும். நாம் திட்டங்கள் தந்து அல்லவா நிதியுதவி கேட்க வேண்டும்? வெறுங்கை முழம்போடுமா? நாமும் நிதி சேர்க்க வேண்டுமே; நம் அரசும் கருத்து வேறுபாடின்றி ஆதரவு தரவேண்டுமே? ‘மொழிப் பிரச்சினையில்’ அரசியல் கலவாது ஒற்றுமைப்பட வேண்டுமே? அரசியல் கலவாத - அதன் நெடி, வாசனை, நிழல் கூடப் படாத ஒரு தன்னாட்சி நிறுவனத்தை நிறுவ வேண்டுமே? உதவி செய்து விட்டு, விலகிநின்று, அதில் மட்டுமாவது ஒரே சிந்தனை, ஒரே நோக்கம், ஒரே செயல் என ஒற்றுமைப்பட வேண்டுமே?

சிவனிய மெய்யியலில் ஒன்று சொல்வார்கள். நான் ஒன்றும் தத்துவம் பேசவில்லை. ‘சின் முத்திரை’ என்பார்கள். கட்டை விரல்நுனியும் அதற்கு அடுத்த மோதிரவிரல் நுனியும் இணைந்து நிற்க, பிற மூன்று விரல்களும் விலகி நிற்கும். இதன் பொருள் மும் மலங்களின் (அதாவது குற்றங்களின்) நீங்கிய உயிரை,

அது வளைந்து, பக்குவப் பட்ட நிலையில், கட்டை விரலாகிய இறையும் வளைந்து வந்து, அவ்வுயிரை ஆட்கொள்ளும் என்பர்.

நாமும் ஆங்கில மோகத்தால் தமிழை அறவே புறக்கணித்தல், தமிழுடன் பிறமொழி கலந்தும் கொச்சைப் படுத்தியும் பிழைபடுத்தியும் பாழ்படுத்துதல், தமிழுக்குச் செய்ய வேண்டிய ஆக்கப் பணிகளைக் கைவிட்டு மேடையில் மட்டுமே தமிழ் முழங்கி முடங்கிப் போதல் ஆகிய இம் முக் குற்றங்களின் நீங்க வேண்டும். நம் தமிழறிஞர்கள், கல்வியாளர்கள், சமஸ்கிருதம், இந்தி உட்படப் பிற மொழியறிஞர்கள் எல்லோருடனும் கூடி, தமிழின் உண்மையான செவ்வியல் உருக்காட்சியை (Image) உருவாக்கிப் பக்குவப் படவேண்டும். அப்போது உலகமே நாம் சொல்வதை ஏற்கும்; நாம் சொல்ல நினைத்ததை அது சொல்லும்; நாம் புகழ எண்ணியதை அது புகழும்; நாம் விட்டதை அது தொடரும்; நாம் ஊன்றியதை அது வளர விடும்; நாம் தொட்டதை அது துலங்க வைக்கும்.

மாற்றாரும் ஏற்க ஒரு வழி காணலாமே?

ஒரு வாரத்திற்குமுன் தில்லியிலிருந்து ஒரு பேராசிரியை சௌதாமினி என்பவர், என் இல்லம் வந்திருந்தார். 1973 முதலாக ஒப்பிலக்கிய அறிமுகம், சங்க இலக்கிய ஒப்பீடு என இவ்வாறு, தமிழ்ச் செவ்வியல் சிறப்பை தனித்தும் கிரேக்கம் இலத்தின் சமஸ்கிருதம் ஆகிய மொழிகளுடன் ஒப்பிட்டும் தமிழின் தொன்மை, சங்கமிருந்தமை போன்றவற்றைச் சான்றுகளுடன் ஒப்பிட்டும் 12 நூல்கள் எழுதியுள்ளேன். அவற்றில்

சிலவற்றைப் படித்த அவர், நேரில் வந்து ஒரு குறுந்தகட்டில், அரைமணி சேர்க்கக்கூடிய அளவு, என் விளக்கங்களைப் பதிவு செய்து சென்றார். மனிதவள மேம்பாட்டு உதவியுடன், தில்லியிலுள்ள நிறுவனம் ஒன்றற்காக, தமிழகக் கலை, கோயில், நாகசுரம், நாடோடிப் பாட்டுடன், அவர்தம் தனிப்பட்ட ஆர்வம் காரணமாக என்பேச்சையும் பதிவு செய்து சென்றார். அப்போது அவர் ''இவ்வளவு சிறப்பும் தொன்மையும் உடைய நமது கலை, இலக்கியம், இலக்கியக் கொள்கை இவற்றை முழுமையாக இந்திய மொழிகளில் தந்திருக்க வேண்டாமா? அவர்கள் இவற்றைப் படித்து, 'அடடே, இவ்வளவு தொன்மையுடையதா? சிறப்புடையதா? தனித்தன்மையுடையதா?' - என அவர்களாகவே அவர்கள் வாயால் சொல்லவைக்க முடியுமே? இந்திய மொழிகளில் எல்லாம் இவற்றை மொழியாக்கம் செய்து தந்தால் அவர்கள் நம்முடன் போட்டி போட வரமாட்டார்களே?'' என்றார்.

உங்கள் செல்வத்தை எங்களுக்குக் காட்டவில்லையே - பிறமொழி வல்லுநர்களின் ஆர்வம்

ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்பு, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில், தெலுங்குத் துறையில், அதன் தலைவர் கிரி பிரகாஷ், ஒரு தேசியக் கருத்தரங்கம் நடத்தினார். அது சித்திர கவிகள் பற்றியது (National Seminar on Chitra Kavi or Fancy Poems). இந்திய மொழியாளர்கள் - சமஸ்கிருதம் உட்பட வந்து ஆய்வுரை வழங்கினர். சித்திரகவிக்கும் அவதானம் எனப்படும் கவனகக் கலைக்கும் தொடர்புளது போலும். காலை

மாலை ஆய்வுரை படித்தபின் ஏதேனும் ஒரு மொழி சார்ந்த கவனகத்துடன் முடியும். சமஸ்கிருதம் உட்பட, ஆறேழு அவதானங்கள் நடைபெற்றன. இறுதிநாளன்று தமிழகக் கவனக வல்லுநர் இராமையா அவர்கள் மகன், 'கவனகர் முழக்கம்' ஆசிரியர் கனக சுப்புரத்தினம் கவனகம் நடத்தினார்.

அதைப் பார்த்த அனைத்து மொழியினரும் அதிர்ந்து போனார்கள். நாங்கள் எல்லோரும் சமஸ்கிருதம் ஒன்றையே பின்பற்றி, ஒரே மாதிரி, நடத்தினோம். உங்கள் கவனகம் முற்றிலும் 'ஒரிஜினலாக' - தனித்தன்மையுடன் உளதே என வியந்து, அவரைக் கட்டிப் பிடித்துக்கொண்டு பாராட்டினார்கள்.

முன்னதாக உணவு வேளைகளில் கலந்துரையாடுவோம். அப்போது அவர்கள், "உங்களிடம் இத்தனை தனித்தன்மை வாய்ந்த, இலக்கியம், கலை, இலக்கியக் கொள்கை என எல்லாச் சிறப்பும் உள்ளன. அவை அனைத்தையும் எங்கள் மொழிகளில் தந்தாலல்லவா நாங்கள் உங்களையும் கற்போம்; உங்களையும் மேற்கோள் காட்டுவோம்; உங்களையும் பின்பற்றுவோம்.

இப்போது நாங்கள் சமஸ்கிருதம் ஒன்றையே மேற்கோள் காட்டுகிறோம்; பின்பற்றுகிறோம். வேறு வழி இல்லை. அவைகளே எங்களுக்குத் தரப்பட்டுள்ளன" என்றார்கள்

கன்னடமொழி அறிஞர் சொன்னார்; "நாங்கள் இந்திய இலக்கியக் களஞ்சியம்" (Anthology of Indian Literature) என ஒன்று தொகுத்ததில், சுமார் இருபது சங்கப்

பாடல்கள் மொழிபெயர்த்து வைத்துள்ளோம். நீங்கள் முழுமையாக தொல்காப்பியத்தை, சங்க இலக்கியத்தை, காப்பியங்களை இலக்கிய இலக்கணக் கொள்கைகளை ஏன் எங்களுக்கு மொழியாக்கம் செய்திருக்கக் கூடாது?'' என அவர் வினவினார்.

எல்லோரும், ''உங்கள் பல்கலைக் கழகங்கள், தமிழ்ப் பல்கலைக் கழகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமெல்லாம் என்ன செய்கின்றன? நீங்கள் உங்கள் குண்டு சட்டிக் குள்ளேயே குதிரை ஓட்டிக் கொண்டிருந்தால், எங்களுக்கு எப்படித் தெரியும்'' - என்றே வினவினர். அவர்களாக வினவியவை இவை.

1981 - 82 இல், பல்கலைக் கழக நல்கைக் குழு எனக்குத் 'தேசியப் பேராசிரியர்' என்ற சிறப்பினை அளித்தது. அதன்படி இந்தியாவிலுள்ள தமிழ்த்துறையுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்கட்கும் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. எல்லா இடங்களிலும் 'தொல் காப்பியரின் இலக்கியக் கொள்கைகள்' பற்றியே பேசினேன். தில்லிப் பல்கலைக் கழகத்தில் தமிழும் 'இக்கால இந்திய மொழிகள்' (MIL - Modern Indian Languages) என்ற துறையில்தான் இன்று உளது. அதன் தமிழ்ப்பகுதித் தலைவர் க.ஆறு முகனார் தலைமையில், யான் ஆங்கிலத்தில் உரையாற்றிய பொழுது, ஒரு பஞ்சாபி மொழிப் பேராசிரியர் எழுந்து, ''நீங்கள் உங்களுக்கு எனத் தனித்துவம் வாய்ந்த இலக்கியமும் இலக்கியக் கொள்கைகளும் இருப்பதாகப் பேசினீர்கள். இங்கு எல்லோரும் சமஸ்கிருதக் கொள்கை களையே, தங்களுக்கும் உரியனபோலப் பேசுகிறார்கள். நான் பஞ்சாபி. எங்களுக்கென்று இலக்கியக் கொள்கை

இராதா?'' - என வினவினார். நான் ''உங்களுக்கு என இலக்கியங்கள் இருக்கும் தானே. அவற்றில் உங்கள் நாடு, இனம், பண்பாடு, கலைகளுக்கு ஏற்ற சாயல்கள் படிந்திருக்கும். அவற்றை நீங்கள் கண்டு, உருவாக்கி, பிற மொழிக் கொள்கைகளுடன் ஒப்பிட்டு, உங்களின் தனிச் சிறப்புக்களைக் கண்டறிந்து, அவற்றை விதிகளாக வகுக்க வேண்டும்'' என்றேன்.

நாம்தான் உலகிற்கு உணர்த்தவேண்டும்

இவற்றை இங்கு இவ்வளவு விரிவாகச் சொல்லக் காரணம் நாம் நமது மொழியின் கட்டமைப்பை, இளமை மாறாத் தன்மையை, அதற்கான காரணங்களை இந்திய மொழிகளிலும் தரவில்லை; உலக மொழிகளிலும் வெளியிடவில்லை. ஏதோ சில அவர்களாக எடுத்துக் கொண்டார்கள் என்ற பெருமையிலேயே, திளைத்துச் சோர்ந்து போகிறோம். தமிழின் தொன்மை, அது திராவிட மொழிகளின் தாய் என்பது, ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் தமிழே பேசப்பட்டது என்பது, சங்க இலக்கியத் தனித் தன்மைகள், அரிஸ்டாட்டிலுக்கும் பரத முனிவருக்கும் ஹீசியட்டுக்கும் ஈடாக மட்டுமன்று, அவர்களின் மேம்பட இலக்கண, இலக்கியக் கொள்கைகளைத் தந்த தொல் காப்பியத்தையும் அது தந்த செல்வங்களையும் உடைமை தமிழ்ச்சொல்வளம் - கட்டமைப்பு - தொடர்க் களஞ்சியங்கள் என இன்ன பிறவற்றை எல்லாம் நாமாகவேனும் ஒருங்கு கூடி விளக்கி, வகுத்து, உருவாக்கினோம் இல்லை. அவற்றைப் பிறமொழிகளில் உணர்வும் உண்மையான சாரமும் மாறாமல்தந்தோமில்லை. எத்தனையோ மொழிகளில் முழுமையாக மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறளின்

உண்மையான கருத்தமைதி கூட முழுமை பெற விளக்கப் படவில்லை. உண்மையான 'திருக்குறட் கொள்கை' - இன்னமும் உலகெலாம் பரவவில்லை.

ஒருசொல் கேளீர்! நற்றமிழவையம் காண்போம் வாரீர்!

இங்கு ஒவ்வொரு செயலாக்கப் பணிக்கும் பல வழிகள் உள என முன்மாதிரியாகச் சுட்டி, அவ்வாறு பெரும் பணிகள் சில தரப் பட்டுள்ளன. இவை மேலும் ஆழமும் அகலமும் திட்பமும் உடையவையாக விரித்தற்குரியன. தமிழ் ஆங்கிலம் மலையாளம் கன்னடம் தெலுங்கு வங்காளம் இந்தி குசராத்தி மராத்தி ஆகிய ஒன்பது மொழிகளில் சிறுநூல்கள், கையேடுகள், பெரு நூல்கள், களஞ்சியங்கள் எனச் சிறார் முதல் ஆய்வறிஞர் வரை படிக்கு மாறு தரற்பாலன.

பிரெஞ்சு, சீனம்,, மலாய், உருசியம், செரு் மானியம் போலும் பிற உலக மொழிகளிலும் இயன்ற அளவு தரவேண்டியன.

தவத்திரு தனிநாயக அடிகளார் தொடங்கியது போல, முத்திங்களிதழ் ஒன்று (தமிழிலும், ஆங்கிலத்திலும்) வெளியிட்டு, செய்தித் தொடர்பும் ஆய்வுக் கட்டுரைகளும் புதிய ஆழமான ஆய்வுநூற் பட்டியலுடன் நூலறி முகமும் செய்தல் வேண்டும்.

தமிழகத்தும் தமிழகத்தோடு தொடர்புடைய தமிழ் வழங்கும் நாடுகளிலுமாக ஆயிரம் கிளைகள் இம்முத்திங்கள் இதழால் முதலில் தொடர்பு படுத்தப்பட வேண்டும்.

'நற்றமிழவையம்' என, அரசியல் சாராத, ஆனால் அனைவரின் பொருளுதவி பெற்ற, முற்றிலும் 'சாகித்திய அகாதெமி' அல்லது நிகர்நிலை பல்கலைக் கழகம் போன்ற விதிகளுடன்கூடிய மைய நிறுவனம் அமைதல் நலம். உலகத் தமிழமைப்புக்கள் ஓராயிர மேனும் தங்கள் தனிப்பட்ட பெயர், செயல், அடையாளங்களுடன் 'நற்றமிழவைய'த் துடனும் தொடர்புறு மையங்களென அமைதல் பெரும் பயன்தரும்.

'இத்துணையும் இத்தனையும் அமையுமா?' எனத் திகைக்க வேண்டாம். தனிப்பட்ட ஆர்வலர், சிற்றிதழ்கள், தமிழமைப்புக்கள், பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், பள்ளிகள் எல்லாம் இதில் இணையலாம்'. கனவு காண்பதில் குற்றமில்லையே? ஒருவேளை நனவாகி விடலாம் தானே? முற்றிலும் அரசியலே சாராத இலக்கிய இயக்கம் இது.

தமிழின் தொன்மை

தமிழின் தொன்மையை நிறுவ நமக்குக் கிடைக்கும் சான்றுகள் பலவுள. வரலாற்றில் தமிழர் அழுத்தம் வைத்திலர்; வரலாற்றை ஆக்கிய அவர்கள், அவற்றைப்

பதிவு செய்யவில்லை. சிலரை 'இவர் வரலாறு படைக்கின்றவர்' என்பதில்லையா?

ஒரு புலவன் தான் எழுதிய பாடலால் பெயர் பெறுவது தமிழில் ஒரு புதுமை. அவனே அப்பாடலா? அப் பாடல்தான் அவனா? அவன் தன்னை இலக்கியப் படுத்திக் கொண்டு, அதனுள் கரைந்து ஒன்றிப் போகிறான். இதை மட்டுமே நாம் உலகத்தவர்க்குச் சொல்ல வேண்டிய விதத்தில் சொல்லலாமே?

சங்க இலக்கியத்தில் நந்தர்களைப் பற்றி, பாடலி புத்திரம் பற்றி, அது சோணை நதிக்கரையில் இருந்தது பற்றியெல்லாம் வருகிறது.

'பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்து' என்பது, தொல்பழங்கால நிலை. ஆற்றங்கரையில், ஓர் அடையாளமான மரத்தடியில், பொன்னும் பொருளும் புதைத்து வைத்துக் காத்தனர். இது பாடலிபுத்திர நகரிலும் நடந்தது; சேரனின் 'மரந்தை' நகரிலும் இருந்தது.

மோரியர் என மௌரியர் பற்றி ஐந்து இடங்களுக்கு மேல் வருகிறது.

இந்திய வரலாற்றில் வரும் நந்தர், மோரியர் (குறிப்பாக அசோகன்) வரலாற்றுடன் ஒப்பிட்டுக் காட்ட வேண்டும்.

பாரதப் போரில் சேர மன்னன் உதவியதுபற்றி மூன்று இடங்களில் அழுத்தமாக வரினும், அதைக் கற்பனை என்பார் உண்டு. அவர்களால் தமிழின் தொன்மையைத் தாங்க முடியவில்லை அல்லது அறிய முடியவில்லை.

பாரதத்தில் வெட்சித்திணை இடம்பெறுகிறது. பாரதத்திலும் வான்மீக இராமாயணத்திலும் தமிழ் மன்னர்கள், நகர்கள் பற்றிய குறிப்புக்கள் உள.

வீரயுகம் - என்பது வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டது. சி.எம். பௌரா ஆங்கிலத்தில் எழுதிய 'வீரயுகம்' (Heroic age) நூலைப் படித்துவிட்டு, தொல்காப்பியத்தையும் சங்கப் பாடல்களையும் படித்தால், தமிழர் நாகரிகம் கிரேக்க நாகரிகத்துடன் ஒப்பிடக்கூடிய தொன்மைக் காலத்தது என்பது விளங்கும்.

பண்பாட்டு மானுடவியல் (Cultural Anthropology) நூல்களைப் படிக்க வேண்டும். அவையும் வரலாற்றுக் காலத்துக்கு முந்தைய வாழ்வை விளக்குவன.

தமிழர்கள் தழையுடை உடுத்தமை, மடலேறுதல், தன்னையே பலிகொடுத்தல், விலங்கினங்களுடன் சேர்ந்து வாழ்ந்தமை, புலிப்பல் தாலி அணிந்து மணந்தமை, ஏறு தழுவி மணந்தமை முதலானவை ஒப்பிடற்பாலன.

ஐந்துநிலப் பிரிவாக (Separate Entity) இருந்தமையே ஒரு சான்று. சங்கப் பாடல்களில் 'திணை மயக்கம்' தொடங்குகிறது.

தொல்பொருளாய்வு, அரிக்காமேட்டுச் செய்திகள், உரோம நாணயங்கள், முதுமக்கட் தாழிகள், கல் வெட்டுக்கள் - இன்னன அனைத்தும் ஒருவழித் தொகுக்கப்பட வேண்டும். அகழ்வாய்வுப் பணிபற்றிய விவரங்கள் பலவுள.

குமரிக் கண்டம், சிந்துவெளி நாகரிகம் இரண்டும் பற்றிய அனைத்துச் செய்திகளும், இலக்கியச் சான்று

தொடங்கி அகழ்வாராய்ச்சி வரை யாவும் சேர்க்கப்பட வேண்டும். அறிஞர்தம் கருத்துக்களில், உயிரான பலவும் பலருக்குத் தெரியப் படுத்தப்பட வேண்டும். அருட் தந்தை 'ஹீராஸ்' பாதிரியார் முதல் அனைவர்தம் கருத்தையும் சிலரே அறிவர்.

தமிழில் வரும் கடல் கோள்கள் பற்றிய செய்திகளை இங்கு இணைக்க வேண்டும். முச்சங்கம் பற்றியவை, அன்று 'அவையம்' என அழைக்கப் பட்டமை தொடங்கி, அனைத்தையும் ஒருவழித் தொகுத்தல் பயன்படும்.

சங்கப் பாடல் தொகுப்புக்களில் வரும் 'திட்டமிடல்', 'இழந்தது போக மீந்ததைக் காத்தல்', 'மீட்டுருவாக்க முயற்சி' - இவை மூன்றுமிருப்பதை விளக்க வேண்டும்.

தமிழகமாக இந்தியா முழுவதும் இருந்ததைப் பலர் நன்கு விளக்கியுள்ளனர். சங்கப் பாடல்கள் மூலம் ஆங்கிலேயருக்கு முன்பு, தமிழில் மட்டுமே இந்தியாவை ஒரே நாடாகப் பாவித்தமை தெரிகிறது. வடநாட்டுப் படையெடுப்புக்களும் தரைவழி வாணிகத் தொடர்பும் முன்னையதின் தொடர்ச்சியே.

கடல்வழி வாணிகம்பற்றி இருநூற்றுக்கும் மேற்பட்ட குறிப்புக்கள் உள. அவை ஒருவழித் தொகுக்கப் படல் பயன்படும். நமது துறைமுகங்கள், பிறநாட்டார் பயணக் குறிப்புக்கள் ஒப்பு நோக்க வேண்டும்.

கிரேக்கத்துடனும் உரோம நாட்டுடனுமான தொடர்புகளும் சமஸ்கிருதத்துடனான தொடர்புகளும் பற்றிய குறிப்புக்கள் திரட்டப்பட வேண்டும்.

சங்கப் பாடல்களில் காணப்படுவனவும் தொல் காப்பியம் குறிப்பிடுவனவுமான தமிழின் சொல்வளம், இலக்கிய வகைவளம் விளக்கப்பட வேண்டும்.

இதுவரை தமிழின் தொன்மை பற்றி வந்துள்ள நூல்கள், கட்டுரைகள், குறிப்புக்கள் யாவும் ஒரு தனி நூலகமாகவே தொகுக்கலாம்.

இவைகளைத் தொகுத்து, மறுக்க இயலாத, நடுநிலை சார்ந்த, அறிவியலுக்கு ஏற்ற சான்றாதாரங்களுடன் தமிழின் தொன்மை பற்றிய நூல்களை முற்கூறிய எல்லா மொழிகளிலும் தரவேண்டும்.

இந்தியப் பெருமொழியாளர் எவரும் தமிழுக்கு இணையான இத் தொன்மை பற்றிய வரலாற்றைப் போட்டி போட்டு எழுத இயலாது. அதிலேயே தமிழை வியப்புடன் நோக்கி, ஏற்று, இந்திய நாட்டிற்குத் தமிழ் ஒரு பெருமை, இந்த நாட்டின் நாகரிகத்தில் தமிழின் பங்கே பெரிது. தமிழாய்வின்றி இந்தியநாட்டுப் பண்பாட்டு வரலாறு முழுமைபெறாது; உலகநாடுகளிலும் தமிழின் பெருமை - அருமைகளைச் சொல்லியே நம் சிறப்பை நிலைநாட்ட முடியும் என்ற ஒரு முடிவுக்கு அவர்கள் வரநேரும். இவ்வளவு காலம் வட மொழியை மட்டுமே எண்ணி யிருந்ததை மாற்றிக் கொண்டு, அதற்கும் முந்தையது மட்டுமன்றி, அதன் வளர்ச்சிக்கும் உதவியது தமிழே எனும் உண்மை நிலை நாட்டப்படும்.

திராவிட மொழிகளின் தாய்

சமஸ்கிருதப் பேரறிஞர் பி.டி.சீனிவாச அய்யங்கார் தொன்மைமிக்க காலத்தில், இந்தியா முழுவதும் தமிழும்

அதன் கிளை மொழிகளுமே வழங்கின என்பதைத் தெளிவுபட விளக்குகின்றார்.

சிந்துவெளி முதல் குமரிக் கண்டம் வரை தமிழ் வழங்கியுளது.

டாக்டர் கால்டுவெல் திராவிடமொழிகளின் மூத்தமொழி என விளக்கியுள்ளமை எல்லோரும் அறியும் வகையில் சுருக்க மாகவேனும் இன்றியமையா இடங்கள் அனைத்தும் தொகுக்கப்பட வேண்டும். அவர் காலத்தும் அவருக்கு முன்னரும் பின்னரும் குண்டர்ட்டு, கிரையர்சன் போல, பலர் திராவிட மொழிகளைத் தனித்தனியே ஆராய்ந்துள்ளனர். இவை அனைத்தினாலும் தமிழின் தொன்மையும் அதுவே திராவிடமொழிகளின் மூத்த மொழி - அதற்கும் மேலாக அவற்றைத் தோற்றுவித்த தாய்மொழி என்பதை நிறுவமுடியும்.

T.Burrow and M.B. Emeneau அதாவது பேராசிரியர்கள் எமனோவும் பரோவும் சமஸ்கிருத அறிஞர்களாகக் கற்றுத் தொடங்கி, திராவிடமொழிக் குடும்பத்தை முற்றவும் ஆராய்ந்து 'A Dravidian Etymological Dictionary' என்பதாகத் தொகுத்து, ஆக்சுபோர்டு வெளியீடாகத் தந்திருப்பதைத் தமிழாக்கம் செய்யவேண்டும். கால்டுவெல் 12 திராவிடமொழிகள் (திருந்தியவை 6 + திருத்தமுறாத நிலையின 6) எனக் கணக்கிட்டதை, இவர்கள் இந்தியா முழுவதுமாக ஆராய்ந்து தமிழுட்பட 24 திராவிட மொழிகள் பற்றி விவரம் தந்துள்ளனர். நாம் அவர்களுக்குப் பின் ஆராய்ந்து, இன்னும் நுட்பமாக மேலும் பல உண்மைகள் கண்டிருக்க வேண்டும்.

யான் நடுவண் அரசுத் தேர்வாணைய (UPSC) விருந்தினர் மாளிகையில் ஒருமாதம் தங்கியிருந்தபொழுது, அங்கு நம் தமிழகத்தைச் சார்ந்த, இ.ஆ.பணியில் வட நாட்டில் பல இடங்களில் இருப்பவர்களையும் அவ்வப் பகுதிப் பேராசிரியர்களையும் காண - பேச - கலந்துரையாட நிரம்ப வாய்ப்புக் கிடைத்தது.

அவர்கள் 'சங்க இலக்கியம்' என்ற சொல்லை மட்டும் கேள்விப்பட்டுள்ளார்கள். ஆனால் அதன் தொன்மை, சிறப்புப் பற்றி ஏதேதோ சொல்கிறார்களே; அவற்றை எங்களுக்கு யாரேனும் விளக்க முடியுமா? எந்தப் பல்கலைக் கழகம் அல்லது துறைகளுடன் தொடர்பு கொள்ள வேண்டும்? அதில் வல்லுநரான சிலரது முகவரிகள் தரமுடியுமா? ஆங்கிலத்திலோ, எங்கள் மொழியிலோ நூல்கள் கிடைக்குமா? - என்று கேட்டார்கள். முக்கியமாக வங்காளம், குசராத்திப் பேராசிரியர்களே, உணவு வேளைகளில், இவை பற்றி என்னிடம் கலந்துரையாடி, குறிப்புக்களும் சில முகவரிகளும் பெற்றுக் கொண்டார்கள்.

வடநாட்டில் பல ஊர்ப் பெயர்கள், இடப்பெயர்கள், ஆற்றுப் பெயர்கள், மக்கட்பெயர்கள் போல்வன, தமிழ்போலவே இருப்பதாக, நம் இந்திய ஆட்சிப்பணி நண்பர்கள் கூறினர். 'காளிகோட்டம்' தான் 'காளிகட்' ஆகி, ஆங்கிலேயர்களால் கல்கத்தா ஆனது என ஒரு நண்பர் சொன்னதும் இதனை காளியை வழிபடும் அங்கு நேரில் போய், பெயராய்வு செய்ய வேண்டும்போல் எனக்குத் தோன்றியது.

மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் திராவிடத் தாய் தமிழ் என ஆய்ந்துள்ளமை குறிப்பிடற்பாலது.

வரலாறு பல அடுக்குகள் கொண்டது. மேலேயுள்ள அடுக்கு மட்டுமே வெளியே தெரியும். பலர் வடமொழியே தொன்மையானது என்றும் இந்தியக் 'கலாச்சார' மொழி அதுவே என்றும் தமிழ் அதிலிருந்து கடன்வாங்கிப் பிழைத்ததென்றும் தவறாக எடைபோட்ட காலம் ஒன்றுண்டு. தமிழறிஞர்களே இக் கருத்தைப் பரப்பி, மேன்மை தேட முயன்றதுண்டு.

கால்டுவெல்லும் எமனோவும் பரோவும் தமிழ் வட மொழியிலிருந்து சொற்களைக் கடன்பெற்றதுபோல, வடமொழியும் தமிழிலிருந்து சொற்களைக் கடன் பெற்றதென நூறு சான்றுகாட்டி நிறுவினர். மீன் - மீனம் என்ற சொல்லின் திரிபு; நீர் - நீரம் என்ற வடசொல்லின் திரிபு என்று கதைத்த காலங்கள் உண்டு. அவை வெளி நாட்டு அறிஞர்களால் ஒரு முடிவுக்கு வந்தன. அதற்கும் மேலாக நாம் சமஸ்கிருதம் படித்திருக்க வேண்டும். நான் சொல்வது, தமிழில் ஆழ்ந்த புலமை பெற்றபிறகு, நடுவுநிலையும் அறிவியலும் சார்ந்த ஆய்வுக்காக, அம் மொழியைப் படிக்க வேண்டும் என்பதேயாம். (இன்றேல், ஒன்றுக்கும் உதவாத சில சிங்கங்கள் 'தமிழண்ணல் இந்திக்கு வக்காலத்து வாங்கிவிட்டார்; சமஸ்கிருதத்தைப் படிக்கச் சொல்லி விட்டார். பச்சைத் துரோகி' என்று என்னைக் கடித்துக் குதறிவிடுவர்.)

நம் ஆய்வுகளை மேலும் எப்படித் தொடரலாம் என்பதற்குச் சில கருத்துரைகள் தருகின்றேன்.

மலையாளத் தமிழ்ச்சொற்களஞ்சியம்
கன்னடத் தமிழ்ச் சொற்களஞ்சியம்
தெலுங்குத் தமிழ்ச் சொற் களஞ்சியம்

துளுவம், குடகு, கொங்கணி முதலான பிற திராவிட மொழிகளிலுள்ள தமிழ்ச் சொற்களஞ்சியம் - எனப் பல தொகுதிகள் உருவாக்க வேண்டும்.

இதுபோல கலை, நாட்டுப் புற இலக்கியம், விளையாட்டு, கூத்து - இன்ன பிறவற்றில் இவற்றிலுள்ள தமிழ்க் கூறுகளையும் தனித்தனியே தொகுக்கவேண்டும். பல ஆண்டுகளுக்கு முன், மும்பையிலிருந்து வெளிவந்த ஓர் ஆங்கில இதழில், மலையாள 'அச்சன் கூத்துப்' பற்றிய கட்டுரையைப் படித்தேன். அவ்வளவும் தமிழ்போல இருந்தது. இசைக் கருவிகள் உட்பட கதை, நாடக வடிவம் யாவும் சிலப்பதிகாரத்தை ஒரு சிறிது நினைப்பூட்டின. சால்ராவைக் கைமணி எனக் குறித்திருந்தது. இவ்வாறு பலவுள.

பேராசிரியர் மு.வ.அவர்கள், தமது 'தமிழ் இலக்கிய வரலாறு' நூலில், ''ஒரு காலத்தில் கன்னடத்தைக் கரு நாட்டுத் தமிழ் என்றும் துளு மொழியைத் துளு நாட்டுத் தமிழ் என்றும் மலையாளத்தை மலைநாட்டுத் தமிழ் என்றும் சிலர் குறிப்பிட்டது உண்டு'', என எழுதுகின்றார் (சாகித்திய அக்காதெமி, 1972). வடமொழிக் கலப்பால் தெலுங்கும் கன்னடமும் கூடுதலாக வேறுபட்டனவென் றாலும் மலையாளமும் துளுவும் பிறவும் அத்துணை வேறுபடவில்லை என அவர் குறிப்பிடுவதும் உண்மையே. முனைவர் ந. சஞ்சீவியின் தமிழியல் கட்டுரைகள் - எனும் நூலில், 'மலையாளிகள் தமிழ்', 'மலையாளிகள் - தமிழ் பொருட்சிறப்பு' நேப்பாளியில் தமிழ் எனும் கட்டுரைகள் சிந்திக்கற்பாலன (1989).

''மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு, குடகு, கொங்கணி மொழிகளில் வழங்கும் தமிழ்ச்சொற்கள் பல ஆயிரமாகும். அவற்றையும் தனித்தனியே அகராதிகளாகத் தொகுக்க வேண்டும். மலையாளத் தமிழ்ச்சொல் அகராதி, தெலுங்குத் தமிழ்ச்சொல் அகராதி என இவை வெளிவரின், மேலாய்வுக்குப் பெருந்துணையாகும்'', என்று 1991-இல், தினமணி தமிழ்மணியில் என் கட்டுரை ஒன்றில் குறித்துள்ளேன்.

இம்மொழிகளில், தமிழ் இலக்கணம் எந்த அளவு பின்பற்றப்பட்டுள்ளது என்பதை மட்டும் கண்டெழுத வேண்டும்.

'செந்தமிழே கொடு மலையாளம்' என்பது போல, முன்பு வந்த நூல்கள் பலவுள. அவற்றைத் தேடித் தொகுக்க வேண்டும்.

தமிழகத்திலேயே பழங்குடிமக்கள், மலைவாழ் மக்கள் பேசும் தமிழிலுள்ள முழுமையான பொருட் சிறப்புடைய சொற்களையும் தொகுக்க வேண்டும்.

மேலே குறிப்பிட்ட அனைத்து மொழிகளுடன் சமஸ்கிருதம் உட்பட பாலி அர்த்தமாகதி முதலானவடநாட்டு மொழிகளில் காணப்படும் தமிழ்ச் சொற்களையும் கண்டுபிடித்துத்தர முடிந்தால் நல்லது.

கிரேக்கம், இலத்தின், ஆங்கிலம் முதலான மொழிகளில் சென்றேறிய தமிழ்ச் சொற்கள் பற்றி முன்னமே ஆராய்ந்துள்ளனர். எடுத்துக் காட்டிற்குக் 'கறி' எனும் சொல்லும் 'நாவாய்' என்பதும் (Navy) போல்பவை

மறுக்க ஒண்ணாதவை. தமிழரின் அரிசி, கிரேக்க இலத்தின் வழியாக, Rice ஆன வரலாறும் எண்ணற்பாலது.

முன்னதாகக் குறிப்பிட்ட ஆக்கப் பணிகளுடன், திராவிட மொழிகள் வழங்கும் மாநிலங்களில் காணப்படும் நாட்டுப்புறக் கலைகள், பாடல்கள், கதைகள் அனைத்தையும் ஆராய்ந்து தொகுக்க வேண்டும். அங்குள்ள சிறுதெய்வ வழிபாடு, குலதெய்வ வழிபாடு யாவும் கண்டு கொள்ளப்பட வேண்டும். அங்குள்ள ஊர்ப்பெயர், இடப்பெயர், மலைப் பெயர், மக்கட்பெயரெல்லாம் ஆராய்ந்து தொகுக்கப் படவேண்டும்.

எடுத்துக் காட்டிற்கு இன்று ஐயப்ப கோயிலைக் குறிப்பிடலாம். ஐ + அப்பன் = அதாவது 'ஐ' ஆகிய தந்தைக்கும் அருள் 'உபதேசம் செய்த' அப்பன் எனப் பொருள்படும். தந்தையை, தமையனை, கணவனை, மூத்தோரை - 'ஐ' அல்லது 'ஐயர்' என்பது மிகப் பழைய தமிழ்வழக்கு. தமையன் - என்பதிலும் தம் + ஐயன் என இது வரக் காணலாம். வடமொழியாக்கி சாமிநாதன் - சாமிக்கு நாதன் என்பதும் கருதுக. முருகனுக்கு உரிய படைவீடுகள் ஆறில், 'ஏரகம்' என்பதை நாம் இன்று 'சுவாமி மலை' என்று கூறுகிறோம். ஆனால் திருமுருகாற்றுப் படை உரையில், நச்சினார்க்கினியர் இதனை 'மலைநாட்டகத் தொரு திருப்பதி என்கிறார்.

சேரநாட்டு, மலைவாழ் மக்கள் ஆடிப் பாடிய குன்றக் குரவையில் வேடுவர்கள் முருகவேளை இவ்வாறு பாடுவதாகச் சிலம்பில் வருகிறது:

சீர்கெழு செந்திலும் செங்கோடும், வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்கை வேலன்றோ...

என்று முருகனுறையும் நான்கு படைவீடுகள் குறிக்கப் படுகின்றன. திருச்செந்தூர் (செந்தில்), திருச்செங்கோடு (சேரநாட்டு எல்லையிலுள்ள செங்குன்று), திருவேரகம் (மலைநாட்டுத் திருப்பதி), ஆகியவற்றுடன் வெண்குன்று என ஒன்றும் வருகிறது. சேரநாடு, கேரளம் ஆனபின் தமிழர்கள் திருவேரகத்திற்குப் பதிலாகச் சுவாமி மலையையும், செங்குன்றத்திற்குப் பதிலாகத் திருச் செங்கோட்டையும் கொண்டனராதல் வேண்டும். இதில் 'வெண்குன்று' என்பதே, பின்னர்ச் 'சபரிமலை' என சமஸ்கிருதமாக்கப் பட்டது என்றார், என்னுடன் பணியாற்றிய பேராசிரியர் தே. ஆண்டியப்பன். சபரி - என்பது வெண்மை என்ற பொருளுடையது.

மேலும் திராவிட மொழிகளிலும் தமிழகத்திலும் வழங்கும் குலப்பெயர்கள், குடிவழிப் பெயர்கள் பல ஆயிரம் உள. ஒரே குலத்தில் தொள்ளாயிரம் பிரிவுகளடங்கிய பட்டியல் ஒன்று என்னிடம் இருந்தது. கள்ளர், மறவர், அம்பலகாரர், சேர்வை, குடியானவர், தேவர், வாண்டையார், படையாட்சியர், வன்னியர், பிள்ளைமார், முதலியார், வேளார், வேளாளர், கம்மாளர், ஆசாரியர், எட்டியார் (செட்டியார்), இரட்டியார் (ரெட்டியார்), ஐயர், ஐயங்கார், பட்டர், குருக்கள் என எண்ணிக்கொண்டே போகலாம்.

தொல்காப்பியர் நிலவழிப் பெயரும், தொழில்வழிப் பெயரும் என இரண்டு குறிப்பிடுகிறார். ஓவியர்குடி, ஆவியர்குடி, ஆய்குடி, வேளிர்குடி என நூறு குடிவழிப்

பெயர்கள் தொகுக்கலாம். இவைபல திராவிட மொழிகளுக்குப் பொதுவானவை.

சாதிப்பெயர்கள் மட்டுமல்ல; சாதி ஒட்டுப் பெயர்களிலும் ஒற்றுமை காணப்படும். இது பற்றி முப்பது ஆண்டுகளுக்கு முன்பே, பேரறிஞர் தெ.பொ.மீ.தலைமையில் யான் ஒரு கட்டுரை படித்ததுண்டு.

தேவராச அர்சு - என்று கன்னடத்தில் ஒரு பெயர் கேள்விப் பட்ட, அரசியல் தலைவர் பெயர். அங்கு இது 'அரசு' என வழங்கும் பின்னொட்டின் திரிபேயாகும். அப்பா (பங்காரப்பா, பசவப்பாவுடன் சின்னப்பா, பச்சையப்பாவையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம்); ஐயா (நஞ்சுண்டையா, நரசிம்மையாவுடன், கருப்பையா, சின்னையாவை ஒப்பிடலாகாதா), அண்ணா (இராமண்ணா, வேமண்ணாவுடன் பெரியண்ணன், வீரண்ணனைச் சேர்த்துச் சிந்திக்கலாம்தானே?) இவை போல இன்னும் பலவுள. பிள்ளை என்பது முதலில் இளைய வீரனைக் குறித்த ஒட்டு: ஆளெறிபிள்ளை, பிள்ளையாட்டு என்பன பல புறத்திணையில் வருவன. முதலி - என்பது முதலில் படை முதலியையே குறித்தது. முதலியார் அழகப்பன் என முன் அடையாக வழங்கியதுண்டு. இவை பலவும் இந்திய மொழிகளிலெல்லாம் தமிழ் ஊடுருவி நின்றதைக் காட்டவல்லன.

சுடுகாட்டைக்கட்டைத்தளம் - கட்டம் என்பதுண்டு. தில்லியிலுள்ள பெரியோர் நினைவிடங்கள் காட், கட், கட்டம் என வழங்குகின்றன. உலகெங்கும் 'ஊர்' என முடியும் ஊர்கள்பல ஆயிரம் உள. கோட்டை, கோட்டம், கோட்

(ராஜ்கோட்) என, வெட்டுப்படுவதால் தமிழாகாமல் போகாது.

தமிழ் இந்தியா, இந்தியத் தமிழகம் - இந்தியாவே ஒரு காலத்தில் தமிழகமாக இருந்தது என நாம் சொல்ல வேண்டாம். இவற்றைத் தொகுத்து, எல்லா இந்திய மொழிகளிலும் தந்தால் போதும். அவர்கள் வாயால் சொல்வார்கள், இந்தியப் பண்பாடு, நாகரிகம், மொழி, வாழ்வு நெறி பலவும் தமிழ்த்தொடர்புடையதே என்று. அதனைச் செய்யும் ஆக்கப்பணியைத் தொடங்கவாவது வேண்டும் என்பதே என்னுடைய வேட்கை.

மொழிபெயர்ப்புப் பெரும்பணிகள்

நம் செந்தமிழின் சீர்மைகளும் செவ்வியல் மொழியாம் சிறப்புக்களும் உலகோர் அனைவராலும் அறியும்படி செய்வதே, நாம் நம் அன்னைக்கு முடிசூட்டுவது போன்ற, அரிய திருப்பணியாகும்.

நம் தமிழ்மக்களே நம் சீர்சால் அன்னையின் சிறப்புக்களை அறியார். நம் சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட, 'ஏதோ, எல்லோரும் செம்மொழி, செவ்வியல்மொழி' என்று சொல்கிறார்களே என்று, தாமும் அதனையே சொல்லினும் அதுபற்றி முழுமையாய் அறியாதாரே பலராவர். இதனை யான் குற்றமாகச் சொல்லவில்லை.

இந்நிலையில் முதற்கண் நாமே நம்மை அறிய வேண்டிய நிலையில் உள்ளோம்.

விவிலியத்திற்கு அடுத்தபடி, திருக்குறள்தான் உலக மொழிகள் பலவற்றில் மொழி பெயர்க்கப் பட்டிருப்பதாக மேடை ஏறி முழங்குபவர் உண்டு. ஆங்கிலத்திலேயே ஏறத்தாழ நூறு மொழி பெயர்ப்புக்கள் வந்திருக்கலாம்.

தமிழிலோ இதுவரை வந்திருக்கும் உரைகளுக்குக் கணக்கு வழக்கு இல்லை. ஆயினும் திருவள்ளுவரின், உண்மையான உள்ளார்ந்த கருத்தை, தமிழறிஞர் பலர்கூடி, ஆராய்ந்து ஒரு 'கட்டளை உரை' எழுதுவது நல்லது. திருக்குறள் உரைவேற்றுமை, உரைவளம், உரைக்களஞ்சியம் என்பனவும் பலவுள.

திறனாய்வு என்று எடுத்துக்கொண்டால், மிகக் கூடுதலான ஆய்வுக்குட்பட்டவை திருக்குறள், சிலப்பதிகாரம், சங்க இலக்கியம் எனலாம். இவை பற்றிய ஆய்வடங்கிய களஞ்சியங்களைப் பார்த்தாலே விளங்கிவிடும்.

பரிமேலழகர் உரை, பழைய பத்து உரைகளுக்கும் தலைமை தாங்க வல்லதுதான். ஆயினும் 'அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்' எனத் தொடங்கும் போதே, திருவள்ளுவர்க்கு நேர் முரண்பட எழுதுகிறார். பிறநாட்டாரும் நம் நாட்டாரும் தொடக்கத்தில் பரிமேலழகரைப் பின்பற்றியே, தத்தம் மொழிகளில் ஆக்கம் செய்தனர்.

இக்காலத்தும் ஆர்வலர் பலர் தத்தம் மனப்போக்கிற்கு ஏற்ப, விளக்கம் தந்துள்ளனர்.

திருக்குறளை முழுமையாய் விளங்கிக் கொள்ள, தொல்காப்பியம், சங்க இலக்கியம் ஆகிய இரண்டின் பின்புல அறிவு மிகவும் தேவை.

புத்தரும் மகாவீரரும்போல, அவர் 'பிராமணியத்தை' - அதாவது 'வைதிகத்தை' முழுவதுமாக மறுத்து எழுதியவர். ஆனால் குறள் நூலுள் இரு நோக்குகள் உள: ஒன்று உலகப் பொதுவானது; மற்றது 'வைதிக வேள்வி, வருணாசிரமம், பரிகாரப் பிராயச்சித்தச்சடங்குகள், மனிதனையும் இல்லறத்தையும் மகளிரையும் பிற்படுத்தி, கண்காணாத தேவருலகைக் காட்டி, மக்களை மறக்கடிக்கும் 'இந்துமதம்' என்று சொல்வதன் அருவருக்கத்தக்க கருத்துக்களை அறவே மறுத்து, முற்கூறியவற்றை மேன்மைப்படுத்துவது. இந்த இரண்டாவது கருத்தில்தான் பரிமேலழகரும் சறுக்கினார்; இன்றும் பலர் தம்மையறியாது அதில் ஈடுபட்டு விடுகின்றனர். இதனை ஓரளவேனும் விளங்கிக்கொண்ட ஆல்பர்ட்டு சுவைட்சர் போல, வேறு எவரும் முழுமையாக விளங்கிக் கொள்ளவும் இல்லை; விளக்கவுமில்லை.

"What a difference between the kural and the laws of Manu, which originated some four centuries before it! In the latter, under the dominance of the Brahmanic spirit, world and life affirmation is still just tolerated alongside world and life negation. In the kural world and life negation is only like a distant cloud in the sky...

Nevertheless, ethics in the kural are not so entirely, dominated by the idea of reward as in Brahmanism, Buddhism and the Bhagavad - Gita. We already find here the knowledge that good must be done for its own sake. It shines out from various maxims...

Whilst the Bhagavad - Gita in a forced and chilly manner gives as a motive for remaining in active life that it is in accordance with the order of the universe, the kural justifies it - what an advance by the idea of ethical activeeity. Work and profit place a man in a position to do good...

According to the kural, duty is not confined, as in the Bhagavat - Gita, to what the caste calling involves, but consists in general in "all that is good".

Maxims about joy in activity, such as one would not expect from Indian lips, bear witness to the strength of the world and life affirmation present in the kural...

So a natural and ethical world and life affirmation of this kind was present among the people of India at the beginning of our era, although nothing of it can be found in Brahmanism, Buddhism and Bhagavad - Gita Hinduism...

மொழிபெயர்ப்பைப் படித்தவர்கள் கண்ட அளவுகூட நாம் திருக்குறளின் தனிச்சிறப்பை அறியவில்லை. இன்னும் சொன்னால், தமிழர்களாகிய நாம் இன்னமும் நுட்பமாக இந்தியத் தத்துவச் சிந்தனைகளையெல்லாம் ஆராய்ந்து, அவர்களினும் கூடுதலாக உண்மைகளைக் கண்டு உலகிற்கு உணர்த்தியிருக்க வேண்டும்.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து', என்பது வெறும் 'உபசார' வார்த்தையே. நாம் எங்கே தந்தோம்? அவர்கள் பலர் வந்தார்கள், எடுத்துக்கொண்டார்கள்.

திருக்குறளின் உள்ளார்ந்த 'செய்தியை' ஒரு குழு அமைத்து, ஒரு முழுமையான ஆராய்ச்சிக் களஞ்சியமாக, இந்திய உலகச் சிந்தனைகளோடு ஒப்பிட்டு எழுதவேண்டும்.

அதன்வழி எழுதப்படும் உரையே 'கட்டளை உரை' எனக் குறிக்க வேண்டும். மீறுவோர், மாறுவோர் மீண்டும் மீண்டும் தோன்றுவரெனினும், அவ்வாறு எழுதும் 'கட்டளை உரை' க்கு மதிப்புக் குறையாது. அதனையே இந்திய மொழிகளிலும் ஆங்கிலத்திலும் பிற உலக மொழிகளிலும் மொழிபெயர்த்து நாம் தர வேண்டும்.

அதுபோலவே தொல்காப்பியத்தையும் சங்க இலக்கியத்தையும் அவற்றின் உள்ளார்ந்த தனித் தன்மைகள் புலனாகுமாறு தமிழிலும் சிறிய, பெரிய நூல்களாகவும் களஞ்சியங்களாகவும் உருவாக்க வேண்டும்.

ஆங்கிலத்தில் சி.எம்.பௌராவும், பிற செவ்வியல் மொழி அறிஞர்களும் எழுதிய நூல்களும் தமிழர்களாகிய நம்மால் படிக்கப்பட வேண்டும். நமக்கு நிகரானவை, சமஸ்கிருதத்தைவிட, அவற்றிலேதான் மிகுதியாகவுள. சி.எம்.பௌராவின் The Greek Experience என்ற நூலைப் படித்தேன். நம் சங்க கால வாழ்வும் நாகரிகமும் போலவே, அந்நூற் கருத்துக்கள் பல தோன்றின. இவ்வாறு நாம் நம் தொல் காப்பியத்தையும், சங்க நூல்களையும் சிறிய, பெரிய நூல்களாக உடனடியாக இந்திய மொழிகளில் தர வேண்டும்.

'பாட்டும் கோட்பாடும்' - என்பதாக (Poetry and Poetics) இருபது முப்பது நூல்கள் எழுதலாம். சுவையாகவும் விறுவிறுப்பாகவும் இருக்கும். அவை அனைத்தையும் இந்திய மற்றும் உலகமொழிகளில் தந்தால் அவற்றை முழுவதுமாகப் படிக்கும் ஆர்வம் ஏற்படும். இதனால் இந்திய, உலகப் பல்கலைக் கழகங்களில் தமிழியல்துறை என்பது மட்டுமன்றி, திருக்குறள் ஆய்வுத்துறை, சங்க

இலக்கிய ஆய்வுத்துறை எனத் தனிச் சிறப்புத் துறைகள் கூட ஏற்படுமென்பது என் நம்பிக்கை.

ஆனால் இவை எல்லாம் நம் கையில்தான் இருக்கின்றன; நமது முயற்சி உழைப்பில்தான் இருக்கின்றன; தொடக்க நிதி ஆதாரங்களை நாம்தான் திரட்டவேண்டியிருக்கும்.

எத்தனை அரசியல் தலைவர்கள், வள்ளல்கள், செல்வர்கள் இதற்கு முன்வருவார்கள்? எத்தனை பல்கலைக் கழகங்கள், இவற்றில் ஏதேனும் ஓர் ஆக்கப்பணியை யாவது, முன்வந்து தொடங்கும்? எத்தனை தமிழறிஞர்கள் - இன்று வறுமையேயின்றி வளமாக இருப்பவர்களே - இதற்குத் தம் முயற்சி, உழைப்பைத் தர முன் வருவார்கள்?

பேசியதையே பேசி, சிரித்ததற்கே சிரித்து; தமிழை வணிக மாக்கி விலைபேசி விற்று, வயிறு வளர்ப்பவர்களால், தமிழகம் கோமாளிகள் நிறைந்த உலகமாகி வருகிறது. தமிழறிஞர் எல்லோருக்குமே இந்த வருமான ஆசை இருப்பதில் வியப்பில்லை. சிலரேனும் முன்வரவே மாட்டார்களா? வரவு தருகிற தமிழுக்கும் சிறிது செலவழிக்கலாகாதா?

நாம்தான் நம் இலக்கியச் செல்வங்களைப் பிறர்க்குத் தரவேண்டும். உலக மொழியினர், அவர்களே தம் வாயால் தமிழ் தொன்மையானது; தொன்மைக் காலத்திலேயே வளமானது; பிற மொழிகள் எல்லாம் மேம்படு முன்பே தலைசிறந்து விளங்கியது; அது 'செவ்வியலுட் சிறந்த செவ்வியல் மொழி ' எனக் கூற வைக்க வேண்டும்.

அப்துல்கலாம் காட்டும் வழி

இந்த நூலை, இந்த இடத்தில் எழுதிக்கொண்டிருந்த பொழுது, அமெரிக்காவில் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டில், நமது முதற்குடிமகன், குடியரசுத் தலைவர் அ.ப.ஜெ. அப்துல்கலாம், தொலைத் தொடர்பு உரையாக தில்லியிலிருந்து ஆற்றிய சொற் பொழிவு, தமிழ்நாட்டு நாளிதழ்களில் வெளியாகி இருந்தது (16.7.2005). திருக்குறள் நம் வாழ்க்கை வெற்றிக்கு வழிகாட்டும் நூல் என்பதை, தம்முடைய வாழ்விலிருந்தே ஒரு நிகழ்ச்சியைக் காட்டி, அவ்வாறு வழிகாட்டிய குறளையும் குறிப்பிட்டிருந்தார். அவர் காட்டிய குறள் இது:

> இடும்பைக்கு இடும்பை படுப்பர், இடும்பைக்கு
> இடும்பை படாஅ தவர்

அப்துல் கலாம் அவர்களின் ஆசிரியர்களுள் ஒருவர் பேராசிரியர் 'சதீஷ் தவான்'. 1970களில் 'இஸ்ரோ' தலைவராகப் பணியாற்றி வந்த அவர், 'இந்தியாவின் செயற்கைக் கோளை விண்ணில் ஏவும் இராக்கெட்டைச் சொந்தமாக இந்தியாவிலேயே வடிவமைத்துக் கட்டுமானம் செய்யவேண்டும்' என்னும் பெரும் பொறுப்பை தம்மிடம் ஒப்படைத்ததாகக் கூறும் நம் குடியரசுத்தலைவர், அப்போது அவர் கூறிய அறிவுரையையும் விரிவாக எழுதியுள்ளார்.

''கலாம்! நாம் எந்தப் பணியையுமே செய்யாமல் இருந்தால் எந்தச் சிக்கலும் இல்லை. ஆனால் ஏதாவது ஒரு குறிக்கோளை முனைப்பாகக் கையில் எடுத்துக் கொண்டு, அதை நிறைவேற்ற முற்பட்டால், அக்

குறிக்கோளை அடைவதற்குள் பல இடையூறுகளும் பிரச்சினைகளும் தோன்றும். ஆனால் அந்த இடையூறுகளும் சிக்கல்களும் நம்மை அடக்கியாண்டு, அவை நம்மை வழிநடத்திச் செல்ல நாம் அனுமதிக்கக் கூடாது. மாறாக அந்த இடையூறுகளைச் சமாளித்து, அவற்றை நம் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து, நாம் அடைய எண்ணிய குறிக்கோளை, இலக்கை அடைதல் வேண்டும்.''

திருக்குறளுக்கு உரைவிளக்கம் என்பது, இவ்வாறு தான் வாழ்வியல் விளக்கமாக இருக்கவேண்டும். பேராசிரியர் தவானின் இவ் அறிவுரையைக் கேட்டதும், தாம் அடைந்த மன நிலையை, கலாம் அவர்கள் மேலும் விளக்கும் நுட்பத்தைப் பாருங்கள் :

''என்ன ஆழமான அறிவுரை! எனக்கு ஒரு வாழ்க்கைக் கல்வியாக என்னை நானே உணர்ந்து, உய்வித்துக் கொள்ள வந்த அறிவுரை. உடனே எனக்கு ஒரு திருக்குறள் நினைவுக்கு வந்தது. இந்த அற்புதமான குறிக்கோட் கருத்தை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர் எவ்வளவு அழகாக இரண்டே அடிகளில் சொல்லியிருக்கிறார் தெரியுமா?

இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்

அதாவது 'ஒருவர் எந்தப் பணியில் ஈடுபட்டிருந் தாலும், அந்தப் பணியில் அவ்வப்போது தடைகள், இடையூறுகள் எதிர்ப்படும். ஆனால் துன்பத்தைக் கண்டு துவளாதவர்கள், அச்சிக்கல்கள் தமக்குத் தலைமை தாங்கி வழிநடத்தும்படி விட்டுவிடாமல், அந்தத் துன்பங்களுக்குத் துன்பங் கொடுத்து வாழ்வில் வெற்றியடைவர்''.

கலாம் சொன்னவை கவனத்திற்குரியவை

திருக்குறள் பற்றி அவர் கூறியுள்ள தலைமைக் கருத்து, இதைவிட முக்கியமானது. இந்நூலில் நாம் இதுவரை எழுதி வந்தது போன்றது. ''வள்ளுவரைப்பற்றி உலக மக்களுக்கும் இளைஞர்களுக்கும் நாமே எடுத்துரைக்க வேண்டும்.'' என்பதுதான் அது.

> ''திருவள்ளுவர் பற்றிய உண்மை விவரங்களை உலகப் பல்கலைக் கழகங்கள் மூலம் உலக இளைஞர்கள் மனத்தில் பதிய வைக்கவேண்டும்...
>
> ''உங்களுக்கு ஒரு வேண்டுகோள்.
>
> திருக்குறள் இந்தியாவின் ஒரு நல்வழி நூல். அதற்குப் பல உரைகள் உண்டு. பல மொழிபெயர்ப்புகள் உண்டு. ஆனால் இன்று உலக அளவிலே சாக்ரடீஸ், கன்பூசியஸ், பிளாட்டோ, அரிஸ்டாடில் போன்ற அறிஞர்களின் கருத்துக்கள் மேற்கோள் காட்டிப் பேசப்படுவதுபோல, திருக்குறள் பேசப்படுகிறதா என்பது சிந்தனைக்குரியது.
>
> திருக்குறளை நாம் போற்றுகிறோம். உலக அறிஞர்களின் வரிசையில் திருவள்ளுவரும் கம்பரும் இளங்கோவடிகளும் புறநானூற்றுக் கவிஞர்களும் அவ்வையாரும் ஒளிவிட்டுச் சுடர்வீசத் தகுதிபெற்ற போதும், இவர்களை யாரும் அவ்வளவாக மேற்கோள் காட்டுவதாக எனக்குத் தோன்றவில்லை.''

நமது குடியரசுத் தலைவர் கலாம் அவர்கள் ஒரு மாபெரும் விண்வெளி விஞ்ஞானியாக மட்டும் விளங்க வில்லை; விண்ணளாவிய தமிழ் உணர்வுள்ள அறிஞராகவும் காணப்படுகிறார். 'வானம் அளந்தது அனைத்தும்

அளந்திடும் வண்மொழி' - எனப் பாரதியார் பாடியது நினைவிலோடுகிறது.

உண்மைக் கருத்தையே மொழிபெயர்க்க வேண்டும்

பெருமகனார் கலாம் அவர்கள் 'திருக்குறளின் உண்மை நிலையை உலகிற்கு உணர்த்த வேண்டும்' என்று, அடிக்கடி கூறுவதை மறத்தல் கூடாது. அதனால்தான் முன்னமேயே, இதுபற்றி, ஒரு குழு அமைத்து, நன்கு விவாதித்து, இந்திய நூல்கள் பலவற்றினின்றும் மிகவும் வேறுபட்டு, திருக்குறள் உலக மானுடப் பொது நூலாகுமாறு எழுதப் பட்டுள்ள திறனை - உத்தியை வைத்து, ஒரு 'கட்டளையுரை' (ஆராய்ச்சியுரையாகக் காரண காரியத்துடனும், அதனடிப்படையில், பரிமேலழகர் உரை போலும் விளக்கவுரையாக ஒன்றும் எழுதுதல்) வேண்டுமெனக் குறிப்பிட்டேன்.

மனிதத்தையே பாடும் தனிச்சிறப்பு

சங்கத் தமிழ் இலக்கியத்துக்கும் இது மிகவும் பொருந்தும். கிரேக்க இலக்கியம் முதலாக சமஸ்கிருதம் ஈறாக அவை அனைத்தும் 'செவ்வியற் காலத்தே' - புராண இதிகாச இலக்கியங்களாகவே எழுதப்பட்டன. சங்கச் செவ்வியல் இதனின்றும் முற்றிலும் வேறுபட்டு, மனிதனை - மானுட வாழ்வை மட்டுமே முன்னிறுத்தி, புராணத் தொன்மக் கூறுகளைச் சிறிதளவு அதை வலியுறுத்துதற்குத் துணையாக்கிக் குறித்தது. இத் தனிச் சிறப்பை உலக அறிஞர்கள் மேற்கோள் காட்டுமளவு பரப்பினோமில்லை.

சங்கப் பாடலின் உருவாக்க நெறி (Creativity) உலகம் வியக்கத்தக்க கூறுகளையுடையது.

சங்கப் பாடல்களில் காணப்படும் மானுட விழுமியங்கள் (Human Values), நிலைபேறுள்ள மதிப்புக்கள் (Eternal Values) ஒப்பற்றவை.

சங்கச் செவ்வியலை கிரேக்கம் தொடங்கி, உலக அனைத்து இலக்கியங்களுடனும் சிந்தனைகளுடனும் ஒப்பிட்டுமட்டும் காட்டினாற் போதும். உயர்வு தாழ்வு விவரிக்க வேண்டாம்.

நம் கடமைகளை நாமேதான் செய்தல்வேண்டும்

இவை அனைத்தும் நம் கடமைகள். நாமே நம் செவ்வியல் இலக்கியம் பற்றி அறியவல்லவா கருத்தரங்கு கலந்துரையாடல் பணிக்களம் நடத்த வேண்டும். நம் கருத்தரங்குகள் வகுப்பறைகள் ஆகவேண்டும். தமிழர்களுக்கே இவை அறிமுகமாகவில்லையெனில் யார் இவை குறித்துப் பாடுபட, பொருள்தர, ஒத்துழைக்க முன் வருவார்கள்?

நம் பல்கலைக் கழகங்களும் தமிழமைப்புக்களும் ஆளுக்கொரு பணி என எடுத்து, முடித்து, அவ்வாறு முடித்ததை வெளியிட மட்டுமே இனி விழாக்கள் நடத்த வேண்டும்.

ஆக்கப்பணி இல்லாத விழாவையும் மேடைப் பேச்சையும் சில காலத்திற்காவது, தமிழர்கள் அறவே புறக்கணிக்கவேண்டும்.

தமிழ் இலக்கியக்கொள்கைகளும் கோட்பாடுகளும் இழந்ததை மீட்போம்; இருப்பதைக் காப்போம்

கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்குப் பிறகுதான் சமஸ்கிருதத்தில் இலக்கிய அணிகள், கோட்பாடுகள் விரிவாகப் பேசப்படுகின்றன. பரத முனிவரின் நாட்டிய சாத்திரத்தில், தமிழின் எதிரொலியே உளது. அவர் காசுமீரத்திலிருந்து எழுதினாரென்பது, தூய அறிவுடைமையாகாது.

> நாட்டியம் நடந்தது ஓரிடம்; இருந்தது ஓரிடம்; வளர்ந்ததும் தமிழிடம். இது பற்றி வடமொழியில் எழுதி வைத்தால், இக் கலை வடநாட்டவர்க்கு உரியதாகாது. மாதவி, 'நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்துக் காட்டினளாதலின்' தலைக்கோலரிவைப் பட்டம் பெற்றாள் என்பது சிலப்பதிகாரம். சிற்பச் செந்நூல் பற்றியும் பேசப்படுகிறது. 'இம் மூல நூல்களை அழித்துவிட்டு, இவற்றை வடமொழியில் எழுதி வைத்துக்கொண்டு, இவற்றைத் தமிழர் அறியுமுன்பே தாம் அறிந்தனர்போல் காட்டிக்கொள்வது, இவ் வடமொழியார் வழக்கம்', எனப் பரிதிமாற்கலைஞர் தமது தமிழ்மொழியின் வரலாற்றில் எழுதியிருப்பதே உண்மை.

மத்திய சாகித்திய அக்காதெமியினர் 'இலக்கியக் கொள்கைக் கலைக்களஞ்சியம்' ஒன்றை ஆங்கிலத்தில் தொகுக்கவுள்ளனர். அதன் தமிழ்ப் பகுதியை, இன்றைய அதன் தமிழ்மொழிப் பொறுப் பாளரும் ஆங்கிலப் பேராசிரியருமான முனைவர் ச. பாலச்சந்திரன் ஏற்றுள்ளார். அதற்கு, தொன்மைக் காலத்து நம் .இலக்கியக் கொள்கைகளை எழுதும் பணியில் எனக்கும் இடமளித்துள்ளார். ஆங்கிலத்தில் சுருக்கமாக எழுதப்பட்டு வருகிற இதனைத் தமிழில் ஒரு பெரிய கலைக்களஞ்சிய மாக்கவேண்டும்.

தமிழர் கண்ட இலக்கியங்களில், படிந்துள்ள இலக்கியக் கொள்கை நூறு இருக்கும். அவற்றுள் அடிப்படையான சிலவற்றை, நன்கு சுவைபட விளக்கி, அக்கொள்கைகள் அமைந்த பாடல்களைத் தேர்ந்தெடுத்துக் காட்டி எத்தனையோ நூல்கள் எழுதலாம். இந்தியப் பெருமொழிகள் அனைத்திலும் கொண்டு வரலாம்.

நாம் தருவனவற்றைப் படிக்கும் இந்தியப் பெருமொழியினர் தம் உணர்வால், எழுத்தால் தமிழ் தொன்மையானதே; அது வட மொழிக்கு நிகரானது மட்டுமன்று அதைவிட உயர்ந்தது; தனக்கெனத் தனிப் பட்ட - வேற்றுமொழிகள் அறியாத இலக்கணக் கூறுகளை யுடையது; இலக்கியக் கொள்கையின் சிறுசிறு கோட்பாடுகளை யெல்லாம் உடையது என ஏற்கவைக்க வேண்டும்.

இதற்காகவே நாம் இந்தியப் பெருமொழிகளைப் படிக்க வேண்டும். இதற்குத்தான் நமது தேர்ந்த ஆங்கில அறிவு பயன்பட வேண்டும். தமிழை இழிவு படுத்தவா ஆங்கிலம்? இந்த அடிப்படையை அறியாது கல்வி வியாபாரம் செய்பவர்களிடையே நாம் ஆங்கில மொழியில் ஒப்பற்ற தேர்ச்சி பெற்றுக் காக்க வேண்டும். எதற்கு? மழலையர் முதல் முடிவுவரை தமிழ்மொழி மூலமே கற்று, ஆங்கிலத்தை ஒப்பற்ற முறையில் பேச, எழுத ஒரு மொழிப்பாடமாக மட்டுமே ஆழமாகத் திட்பநுட்பத்துடன் கற்றாலே நாம் சிறந்து விளங்க முடியும். இன்றைய ஆங்கிலப் படிப்பும், ஆங்கில மொழி வழிப் படிப்பும் பயன்தருவன அல்ல. இவை தமிழைக் கெடுக்கவே பயன்படும். இதில் கல்வி உளவியலும்

இல்லை; உலகெங்குமுள்ள மொழிக்கொள்கைத் தெளிவும் இல்லை.

இயல்பாகவே மிகுதிறனுள்ள ஒருசிலர் மேன்மையுற பல்லாயிரம் மாணவ உள்ளங்கள் பாழடிக்கப் படுகின்றன. மனப்பாடம் செய்யும் நினைவாற்றல் கல்வி, படிப்பு முடிந்ததும் மறந்துபோய் விடுகிறது.

இங்கே சிலர் ஆங்கில வணிகர்கள்; போலிச் சரக்கு வியாபாரிகள். மேலும் சிலர் வஞ்சகர்கள்; தெரிந்தே தமிழை அழிக்க ஆங்கிலப் பள்ளி நடத்துபவர்கள். உலகம் இதை ஒவ்வாது என இவர்களுக்கே தெரியும். என்ன செய்வது? இவர்கள் அனைவருமே பணத்தாசையால் தங்கள் பெயராலும், பொய்ப்பெயராலும் ஆங்கில வழிப் பள்ளி நடத்துபவர்கள். இவர்கள் மேடையில் தமிழில் பேசுவதே தவறு. ஆங்கிலத்திலோ இதுகளுக்கு ஒருவரி பேச வராது.

மேடைப் பேச்சைத் தவிர்ப்போம்!

எனவே சிலபல ஆண்டுகளுக்கேனும் அடிக்கடி மேடை ஏறுவதைத் தவிர்ப்போம்; தவறாக மேடை ஏறுபவர்களைத் தடுக்க முடியாவிட்டாலும் புறக் கணிப்போம். ஆக்கப்பணி இல்லாத ஆரவாரப் பேச்சுக்கு இடங்கொடோம். அருள் கூர்ந்து என் கருத்துக்குச் செவிசாயுங்கள்!

ஆர்ப்பாட்டம் ஒருபக்கம்; ஆக்கப்பணி மறுபக்கம்

தேவைப்படும் போதெல்லாம் ஆரவாரம் செய்வோம்; ஆர்ப்பாட்டம் நடத்துவோம்; உண்ணாவிரதம் மேற்

கொள்வோம்; பேரணி நடத்துவோம்; மறியலில் ஈடுபடுவோம். அனைத்து அற வழிகளாலும் போராடுவோம்.

ஆனால் அவை அரிதாகத் தேவைப்படுவன. அல்லும் பகலும் ஆக்கப்பணியில் ஈடுபடுவோம். நான் இங்கே விவரிக்கின்றவற்றில் ஒன்றிரண்டையேனும் மேற்கொள்வோம்.

ஆளுக்கொரு பணி செய்வோம்; அமைப்புக்கொரு பணி எனப் பொறுப்பு ஏற்போம்.

ஒவ்வொரு பல்கலைக் கழகத்துறையும், ஏதேனும் ஒரு பணியை மேற்கொள்ளட்டும்.

ஒவ்வோரு தமிழமைப்பும் ஏதேனும் ஒன்றில் ஈடுபடுவதாக அறிவித்துச் செயற்படுத்தட்டும்.

தமிழார்வலர்கள், வள்ளல்கள், செல்வர்கள் ஏதேனும் ஒரு பணிக்கு அறக்கட்டளை நிறுவலாமே?

தமிழுணர்வுச் சிற்றிதழ்கள் அனைத்தும் இதில் ஒத்துழைக்க வேண்டும். இவற்றைத் தொடர்ந்து வெளிப் படுத்த வேண்டும். ஒருங்கிணைக்கவும் தொடர்புறுத்தவும் வேண்டும். சிறு குறிப்பும் பயன்படும்; சிறு கட்டுரையும் பயன்படும்; தகவல் தொகுப்புக்கள் ஆயிரம் வேண்டும். ஆக்கப் பணிகள் ஒருவர் இருவரால் முடிவன அல்ல.

தமிழில் அகரமுதலிகள்

ஆக்கப்பணிகள் ஆயிரம் உள. சில மேலே குறிக்கப்பட்டன. எண்ண எண்ண ஆயிரமும் வரும்; அதற்கு மேலும் வரும். இதற்கான நிதி ஆதாரங்களை

வெளிநாட்டுத் தமிழர்கள் - புலம்பெயர்ந்த தமிழர்கள் சேர்த்து வழிகாட்ட வேண்டும். நம் தமிழர்கள் உலகெங்கும் கோயில்களுக்குக் கோடிக் கணக்கில் கொடுக்கிறார்கள். அதுதான் 'புண்ணியம்' என்று யாரோ சொல்லிவைத்து விட்டார்கள். அமெரிக்காவில் தமிழ்த்துறை எனும் பெயரால், தனித்திருக்கும் ஒரே ஒரு 'பெர்க்கிலி' பல்கலைக் கழகத் தமிழ்த்துறைக்குப் பாதி அளவு கூட நிதி சேரவில்லை. ஆனால் அந்நாட்டிலும் மாதம் ஒரு கோயில், மாநிலத்திற்குப் பத்துக்கோயில் என எழுப்பப் படுகின்றன.

தமிழ்க்கல்விக் கோயில்களையே கட்டுவோம்

கோவிலூர் தவத்திரு நாச்சியப்ப அடிகளார் கூறுவதுபோல, இனிப் புதுக் கோயில்கள் வேண்டாம்; இருக்கின்ற கோயில்களைப் பாதுகாப்போம்.

கல்விக்குச் செலவிடுவதே 'புண்ணியம்'; தமிழுக்குச் செல விட்டாலே குழந்தை பிறக்கும்; அதிலும் சங்க இலக்கியத்திற்குக் கொடுத்தால் நல்ல குழந்தை பிறக்கும்; உலக மொழிகளிலெல்லாம் தமிழின் தொன்மையை, சிறப்பைப் பரப்பினால் கன்னிப் பெண்களுக்குத் திருமணமாகும்; நூற்றுக் கணக்கான தமிழ் இலக்கணத் தனித் தன்மை வாய்ந்த கூறுகளையும், உலகிலுள்ள மொழிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கத்தக்க, தனிச்சிறப்பு வாய்ந்த தமிழ் இலக்கியக் கொள்கைகளையும் விளக்கினால் - உலக மொழிகளில் தந்தால் செல்வம் குவியும் - வளம் பெருகும் - வாய்ப்புக்கள் தேடிவரும் - பதவிகள், பட்டங்கள், பரிசுகள் கிடைக்குமென்ற நல்ல நம்பிக்கைகளை எப்போது வளர்க்கப் போகிறோம்!

இவை பற்றிப் பாடல் எழுதுங்கள்! தமிழால் வாழ முடியும்; தமிழால் மட்டுமே வாழ முடியும் எனும் நம்பிக்கையைக் கருவாக வைத்து எழுதுங்கள்! பிறவாறு செல்லும் 'மூடநம்பிக்கையை' - நன்னம்பிக்கையின் பக்கம் திருப்புங்கள்!

ஓர் அகராதியாவது உருப்படியாய் வெளிவருமா?

1. தமிழில் இன்னமும் முறையான, சரியான, முழுமையான தமிழ் அகராதி வரவில்லை. இதுவரை எத்தனை வந்திருந்தாலும், அத்தனையையும் வைத்துக் கொண்டு இது தொகுக்கப் படவேண்டும்.

2. சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட பேரகராதி, முழுமையாக - திருத்தமுடன் - தக்கவர்களைக் கொண்டு - புதுப்பித்து வெளியிடப் படவேண்டும்.

3. திருக்குறளுக்கெனச் சில சொல்லடைவுகள் வந்துள. வைணவச் சொல் அகராதி வந்துளது. சங்க இலக்கியச் சொல்லகராதிகள் சிலவுள. தொல்காப்பியம், சங்க நூல்கள், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, பிறகாப்பியங்கள், கம்பன், சேக்கிழார், நீதிநூல்கள், சிற்றிலக்கியம், தேவாரம், பிறதிருமுறைகள் அனைத்திற்கும் தனித் தனிச் சொல்லடைவுகள் வரவேண்டும்.

சித்தர் பாடல் சொல்லடைவு மிகவும் முக்கியம். சித்த மருத்துவச் சொல்லடைவு சிலவுள.

எல்லாவற்றையும் முழுமையாகப் பலர் சோதித்து, ஆதாரத்துடன் கூடிய 'அதிகாரப்பூர்வமான' - அதாவது

கட்டளை வடிவப்பட்ட அகரமுதலிகள் - சொல்லடைவுகள் வேண்டும்.

4. தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள 'சங்க இலக்கியப் பொருட் களஞ்சியம்' மிகக் குறைந்த விலையில், எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

என்னைக் கேட்டால் இவை பல தெருவுக்கு வரவேண்டும்; சந்தைக்கு வரவேண்டும்; எளிய நூற்கண் காட்சிகளிலும் இடம் பெற்றுத் தழிழரிடையேயாவது பரவ வேண்டும்.

5. நம் பழந்தமிழ் நூல்களிலுள்ள இசைக் கலைச் சொற்கள்; நாட்டிய நாடகக் கலைச்சொற்கள், வானநூற் கலைச் சொற்கள், அறிவியல் சார் கலைச் சொற்கள் தனித்தனியே தொகுக்கப்பட வேண்டும். ஆராய்ச்சி வேண்டாம். சொல் தொகுதியைத் தரின், ஆராய்வார்க்கு அது பார்வை நூலாகும்; பயில்வார்க்குப் பாடநூலாகும்.

6. வட்டார வழக்குச் சொல் அகராதிகள் பல வகையில் தொகுக்கலாம். குலம் வரிசை, இடம் அல்லது வட்டார வரிசை, வட்டார நாவல்களில் இடம் பெற்றுள்ள சொல்வரிசை, நாட்டுப் புறப்பாடல் கதைகள் விடுகதைகள் பழமொழிகளில் வரும் வரிசை - எனத் தனித்தனியே தொகுக்க வேண்டும். (கொச்சை, குறுமொழி, பிழை மொழி வேண்டாம்.)

7. நம் தமிழகத்தில் சிற்பம், மரத்தச்சு, கொத்து, மிடைதல், நெய்தல், மட்பாண்டத் தொழில், தொடங்கி சமையற்கலை வரை நூற்றுக் கணக்கான தொழிற்கலைச்

சொற்கள் - கருவிகள், செய்முறை, செய்பொருள் பற்றியவை பலநூறாயிரம் உள. இவை பெரும்பான்மையின, ஏட்டில் ஏறாதவை. இவை தொகுக்கப்பட வேண்டும். கட்டிடக் கலை, ஓவியக் கலை சார்ந்தன பலவும் வாய்மொழி இலக்கியக் கலை சார்ந்தனவுமான மிகப்பல, வெறுமனே வாயால் பேசப்பட்டே நடந்துவந்ததால், இன்று மறைந்து வருகின்றன.

8. புதிய அறிவியல் கலைச் சொல்லாக்க முயற்சியில், மணவை முஸ்தபா, பலதுறையிலும் தொகுத்து வருகிறார். இன்னும் பலர் அவருடன் ஒத்துழைக்க வேண்டும். புதிய புதிய கலைச் சொல்லாக்க நூல்கள் - களஞ்சியங்கள் - அகரமுதலிகள் வரவேண்டும்.

9. தமிழில் இலக்கணக் கலைச்சொற் களஞ்சியம் தொகுக்கவும் வாய்ப்பிருக்கிறது. பேரறிஞர் பொற்கோ இதைச் சிறுநூலில் தொடங்கி வைத்துள்ளார்.

10. தமிழில் இலக்கியக் கலைச் சொற்களஞ்சியமும் ஒன்று தொகுக்கலாம். இவ்வாறு எண்ணிப் பார்த்து, அவற்றைத் தமிழில் தரவேண்டும். ஆனால் அதுமட்டும் போதாது. இந்தியமொழிகள் அனைத்திலும் உடனுக்குடன், மொழிபெயர்க்கக் கூடியவற்றை மொழியாக்கம் செய்து தரவேண்டும். பிறவற்றை விளக்கியுரைக்க வேண்டும்.

உலகெங்குமுள்ள தமிழ்வழங்கும் நாடுகள்

தமிழ் ஈழம் போன்ற தனித்தமிழ் நாடுகள், சிங்கப்பூர், மலேசியா போலத் தமிழ் பெரிதும் வழங்கும் நாடுகள், மொரீசியசு, ரீயூனியன் போலத் தமிழை மறந்த தமிழர் வாழும் நாடுகள், உலகெங்கும் தமிழர்கள் சிதறி

வாழும் நாடுகள், எல்லாவற்றுடனும் நாள்தோறும் - வாரந்தோறும் - மாதந்தோறும் தொடர்புகொள்ளுதல் வேண்டும். அவரவர் தேவைக்கேற்ப, அங்கங்கு நம்மால் ஆவன செய்து கொண்டே இருக்க வேண்டும். சிங்கப்பூரில் உள்ள தமிழின் செல்வாக்கைக் குறைக்க அவ்வப்போது, இந்தியப் பாராளுமன்ற இந்தி வல்லுநர் - பரப்புநர்குழு அனுப்பப்பட்டு, அங்குள்ள அரசுடன் தொடர்பு கொள்கின்றனர். தமிழர்கள் மிகுதியாக வாழும் மொரீசியசுக்கு, இந்தி மொழி கற்பிக்கும் ஆசிரியர்களையே நடுவணரசு அனுப்புகிறது. தமிழர்கள் கூடுதலாக வாழும் உலக நாடுகளின் தூதரகங்களில் இந்தி பேசினால் மட்டுமே விவரமறிய முடியும். படிவங்களே இந்தியில்தான். பல்லாயிரக் கணக்கில் தமிழர்கள் பயணம் செய்யும் விமானங்களில், எல்லாமே இந்திமயம். பாரத் சஞ்சார் நிகம் லிட் முதல் சர்வ சிக்ஷா அபியான் வரை, நடுவணரசின் நிறுவனப் பெயர்கள் எல்லாம் வடமொழி - இந்திமயம். எல்லாமே அபியான் அல்லது யோஜனாதான். இவை தமிழர் செவிகளை நெருடுகின்றன. ஆயுள் காப்பீட்டுத்துறை (Life Insurance Corporation Of India) தப்பித்தது முன்னமே வந்ததால். ஆனால் அதில் புதிதுபுதிதாக வரும் திட்டங்கள் இந்தியர்களை வாழ வைக்கிறதோ, இல்லையோ மொழிகளைக் கொல்கிறது. எல்லாமே நவ்ஜீவன், ஜீவன் ரக்ஷா, ஜீவன் சுரபி, ஜீவன் ரேகா, ஜீவன் சம்ரித்தி, ஜீவன் சாத்தி, ஜீவன் மித்ரா, ஜீவன் விஸ்வாஷ், பீமா நிவேஷ் - இன்னும் எத்தனை வேண்டும். மொழி வேற்றுமைகளை வளர்ப்பதே ஆயுள் காப்பீடு போலும்!

இந்தி முதலான பிற இந்திய மொழிக்காரர்கள் தத்தம் மொழிகளைக் காப்பதை, வளர்ப்பதை, உயரிடம்

தந்து மதிப்பதைப் பார்த்துக் கூட நம் தலைவர்களுக்குச் சூடு சுரணை வரவில்லையே?

நற்றமிழவையம் அமையட்டும்

இதை இன்னும் நான் இங்கே விவரிக்க விரும்ப வில்லை. British Council - போல தமிழ் வழங்கும் தேயமெல்லாம்; நற்றமிழவையம் கிளைகள் நிறுவப்பட வேண்டும். தலைமை நற்றமிழவையம் தமிழகத்தில் இருக்க வேண்டும். நாளும் உலகெலாம் தொடர்பு கொண்டு, அங்கு தமிழன் தன் அடையாளத்தை இழந்துவிடாமல், தமிழ்க் கல்வியை, நாகரிகத்தை,பண்பாட்டை நிலைநிறுத்த வேண்டும்.

இதனை யார் செய்வார்கள்? 'தலைமை நற்றமிழவையம்' அமைய இடம் வேண்டும் - கட்டிடம் வேண்டும் - உள்கட்டமைப்பு வேண்டும். கோயில்களில் ஆறுகால பூசை, சிறப்பு விழாக்களுக்குச் செலவிடுவது போல, இதற்குச் செலவிட வேண்டும்.

கோயில்களுக்குச் செய்வது 'புண்ணியமாம்'. பகுத்தறிவாளர்கள் கூட, தமிழுக்கு அவையங்கள் அமைத்து, இதுவும் 'புண்ணியமே' என வழிகாட்ட வில்லையே?

சீன நகரங்களைப் பாருங்கள்!

அமெரிக்காவிலுள்ள சீன நகரங்கள் (China town) ஒன்றிரண்டைப் பார்க்க நேர்ந்தது. அதற்குள் நுழைந்து விட்டால் போதும். 24 மணி நேரமும் சீனமொழிப் பாடம் கற்பிக்கப்படுகிறது. சீனக் கோயில், சீனக் கடைத்தெருக்கள்,

சீன உணவகங்கள், சீனத்தை நினைப்பூட்டும் கட்டிடங்கள், கலைகள் - ஒருமுறை உள்ளே போய் வந்தால், சீன நாகரிகத்தை உணர மட்டுமன்று - 'சுவாசிக்க' முடிகிறது. அமெரிக்காவில் ஆங்கிலத்துடனும் ஆங்கிலமறிந்தவர் களுடனும் மட்டுமே பழகும் சீனர்கள், ஒவ்வொரு முறை இச் சீனநகரத்திற்குள் புகுந்து வெளிவரும்போதும், தங்களை 'முழுமைச் சீனர்களாகப்' புதுப்பித்துக் கொள்கிறார்கள்.

தாய்த் தமிழகத்திலேயே தமிழுக்கு மதிப்பில்லையே!

தமிழர்களிடம் இத்தகைய ஆக்கப் பணிக்கான எண்ணம் - உணர்வு தோன்றுவதில்லையே? அங்கேயுள்ள தமிழ்க் கோயில்களிலும் ஆங்கில உரையாடல்கள், அந்நாட்டுக் 'கலாச்சாரப்' படையெடுப்புக்கள்! அங்கேயும் நம் ஐயர்கள் நுழைந்துகொண்டு, யாருக்கும் விளங்காத வடமொழி மந்திரங்கள்!

தமிழன் எங்குபோனாலும் தொலைந்துதான் போகின்றான். இவன் உருப்படுவானா என்பது இன்னமும் ஐயமாகவே இருக்கிறது!

தமிழகத்திலேயே தமிழ்க் கல்வி, தமிழ் வழிக்கல்வி, தமிழ், இலக்கியப் பண்பாட்டுக் கல்வி - முதலானவை எதுவும் இல்லையே என்று புலம்பெயர்ந்த தமிழர்கள் வருந்திக் கூறுவது யார் காதிலும் விழவில்லையே?

நாமே நம் சிறப்பை - நம் மொழியின் தொன்மையை நம் இலக்கியத்தின் தனித்தன்மையை உலகெங்கும் அவ்வம் மாநில மொழிகளில் அவ்வந் நாட்டு மொழிகளில்

கொண்டுபோனால்தான் உலகெங்குமுள்ள பல்கலைக் கழகங்கள் தமிழுக்கு இடமளிக்கக் கூடும்.

இன்றேல் இது வெறும் கனவாகவும் மக்களை ஏமாற்றி, நம்மை நாமே அழித்துக் கொள்வதாகவும் முடியும்

மீட்டுருவாக்கம் : ஒருபெரும் திருப்பணி

தமிழ்க்கலைகள், கலைச்சொற்கள்பல இடைப்பட்ட பல்லவர் காலம் முதல் வடமொழி மயமாக்கப்பட்டு விட்டன. தென்முகக் கடவுளாகிய, வடவர் அறியாத நம் ஆலமர்செல்வன் தந்த நான்மறைகள் வேறு; அவை அழிக்கப்பட்டுவிட்டன.

தமிழர்களுக்கே உரிய சமயங்கள் மூன்று : சிவ வழிபாடு, திருமால் வழிபாடு, கொற்றவை (சக்தி, அம்மன்) வழிபாடு. இவை மூன்றும் வடமொழி மயமாகத் திரிக்கப் பட்டுவிட்டன. தமிழ்நாட்டில் மட்டுமே காணப்படுகிற, தமிழர்களுக்கேயுரிய வழிபாட்டு முறைகள், சிற்பக் கலைகள், கோயிற்கலைகள் பற்றிய தமிழ் ஆகமங்கள் யாவும் அழிக்கப் பட்டுவிட்டன. வடநாட்டவர் அறியாத கிரந்த எழுத்துக்களில் அவை வடமொழி மயமாக்கப் பட்டுள்ளன.

தமிழர்களுக்கேயுரிய நாட்டியக் கலையும், இசைக் கலையும் இங்கே மட்டும் காணப்படுவன. இவை வடமொழி மயமாக்கப்பட்டு விட்டன. களவாடியவன் விளையாடுகின்றான்; காவுகொடுத்தவன் ஏங்கி அழுகின்றான்.

ஏன்? நம் தெய்வங்களின் 'ஆயிரம்பெயர்கள் வடமொழிமயமாக்கப்பட்டதிலிருந்தே, இதை நாம் சான்றுடன் நிலை நாட்டலாம்.

சோழப் பேரரசன் 'பெரியகோயில்' கட்டி, 'பெருவுடையார்' எனப் பெயரிட்டான். அதைப் 'பிருகதீஸ்வரர்' ஆக்கி, விளங்காமல் செய்தார்கள். அடிமுடி காண முடியாத அண்ணா மலையாரை, பொருளே விளங்காமற் போகும்படி 'அருணாசலேஸ்வரர்' ஆக்கினார்கள். சொக்கரையும் சொக்கியையும் சுந்தரே சுவரரும் மீனாட்சியுமாக்கினார்கள். தாயுமானவரை மாத்ருபூதம் ஆக்கினார்கள். மாமல்லன் தன் பட்டப் பெயரால் கட்டிய மாமல்லையை, மகாபலிபுரம் ஆக்கினார்கள். வாடாமலர் மங்கையை - இன்னமும் அசோக குஸுமாம்பாள் எனக் கொட்டை எழுத்தில் எழுதி வைத்திருப்பவர்களை என்ன செய்வது? எதற்கும் ஒரு கதையும் கட்டிவிடுவார்கள். இவ்வாறு ஆயிரம் பெயர்களே கூடத் தமிழாக்கி எழுதிவைக்கப் பட வேண்டியுள; துணிந்து செயற்படும் தலைவர்கள் இல்லையே?

மக்கள் தமிழை விரும்புமாறுசெய்ய இயலாதா? இந்திய மொழிகளைப் பாருங்கள்!

மக்கள் விரும்புகிறார்கள்; நாங்கள் என்ன செய்வோம் என்பது தவறு. மக்களை விரும்பவைப்பது நம் கடமை. அது நம்மால் முடியும். தமிழால் வாழ்வுண்டு, வேலை வாய்ப்புண்டு என மக்களை ஈர்க்க வேண்டும். தமிழ் மூலம் எவ்வித உயர்கல்வியும் கிடைக்கும் - எந்த உயர் கல்வியையும் தமிழிலும் எழுதலாம் என திசை

மாற்றம் செய்து, மக்களைத் தமிழ்வழியில் செலுத்த வேண்டும்.

ஒன்றே ஒன்று செய்தால் போதும். ஒரு குழு அமைத்து, இந்தியப் பெருமொழிகள் வழங்கும் மாநிலம் முழுவதும் சுற்றி, அங்கு அவர்கள் தங்கள் தாய் மொழிக்குத் தரும் நிலைகளை நேரில் கேட்டறிந்து அறிக்கை தரச்செய்து, அந்த அளவு தமிழுக்குச் செய்வார்களா? நடுவுநிலை சார்ந்த அறிஞர் குழு அமைக்கப்படுமா?

இவற்றை எல்லாம் செய்யவில்லை என்றால், நாம் 'தமிழ் தமிழ்' என்று மேடை ஏறி முழங்குவது நாடகமாகத்தானே படுகிறது.

கொள்ளை கொடுத்தவர்கள் நாம்; கொள்ளையடித்தவர்கள் போய் விட்டார்கள். அவர்களின் வாரிசுகளிடமிருந்து, கொள்ளை போன பொருள்களைக் கண்டுபிடித்துக் கொண்டுவர வேண்டாமா? திருட்டுப் போனவற்றை மீட்க வேண்டாமா?

கலையும் வழிபாடும் பிறவும் கூட நம் செல்வங்கள்தானே? பகுத்தறிவாளராக இருந்தால் கூட, கொள்ளையடித்தவற்றை வெளியே விட்டு வைக்கலாமா? கொள்ளையடித்ததை நம்மிடம் ஒப்படைக்க வேண்டாமா? பறிபோனதை மீட்பது தவறா?

மொழிக்கற்பைக் காப்பது நம் கடமை

அரசியலில் பரத்தைமை (Political Prostitution) தவறு. எதற்கும் இசைவது; பொருள், பதவிக்காக எதையும்

விட்டுக் கொடுப்பது; யாருடனும் சேர்வது; பிறகு விலகுவது; பொதுமகளிர் - பொருட்பெண்டிர் - மாய மகளிர் என்றாரே திருவள்ளுவர்; அதன்படி சொல்லுக்குச் சொல் நடப்பது.

இன்று 'அரசியல் பரத்தைமை' உலகெங்கும் பரவி வருகிறது. 'உயிரினும் சிறந்தன்று நாணே; நாணினும், செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று' - என்று முன்னையோர் சொல்லி வைத்ததாகத் தொல்காப்பியத்தில் இது குறிக்கப்படுகிறது (1059). இன்றைக்கு இதைச் சொன்னால் சிரிப்பார்கள். இல்லறமே பாழ்பட்ட பிறகு, அதன் எதிரொலி எல்லா நிலைகளிலும் ஊடுருவி விட்டது. 'கற்பு' - என்பது வேறொன்றுமில்லை. மனத்திண்மை - உறுதியுடைமை - சலனமின்மைதான் அது. தமிழை இது 'ஆட்கொல்லி' நோய்போலப் (Aids) பரவி ஆட்டிப் படைக்கிறது. தொலை நோக்குடையவர்களுக்கு, இஃது அச்சத்தைத் தருகிறது. தவத்திரு மறைமலையடிகள், மொழி ஞாயிறு பாவாணர், பாவலரேறு பெருஞ் சித்திரனார் எனச் சிலர் நினைவிற்கு வருகின்றனர். நம் அரசியலில் மொழிக்கற்பு பறிபோய் நீண்ட நாட்களாகி விட்டது. மொழியைப் பொறுத்தேனும் நம் கற் புடைமையைக் காப்போமாக

'மொழிக் கற்பு' - எனும் ஒரு தொடரை மூதறிஞர் வ.சுப.மா.முன்மொழிந்ததுண்டு. பேரறிஞர் மு.வ.இதை விளக்கியதுண்டு. இனியேனும் நாம் ஆக்கவழியிலும் செயற்பட்டால் தான், நம் 'மொழிக்கற்பு' காக்கப்படும். ஒரேஉறுதியுடைமை; எதற்காகவும் அசையாமை; தன்னை இழந்தாலும் தமிழை இழவாமை! நம் இளைஞர்களிட

மேனும் இவ்உறுதியுடைமையை நாம் பதிவிக்க வேண்டும்.

உலகம் நம் மொழியின் தொன்மையை உணர வேண்டும்.

உலகம் நம் இலக்கியத்தின் தனித்தன்மையை அறிய வேண்டும்.

உலகம் கிரேக்க மொழியினும் மேம்பட்ட 'செவ்வியலிற் சிறந்த செவ்வியல்மொழி' தமிழ் என ஏற்கச் செய்ய வேண்டும்.

தொன்மைமிக்க உலக மொழிகள் எல்லாம் புராண வடிவாக - அற்புத நிகழ்வாக - நம்ப முடியாத கற்பனையாகவே தொடங்கின. அன்றே தமிழன் மனிதனை, மனிதனுக்காக, தானும் ஒரு மனிதனாக இருந்து பாடினான்.

இவை கனவல்ல தம்பி; வரப்போகும் வரலாறு!

இதற்கென ஒரு 'நற்றமிழவையம்' அமையக் கூடும் என்பது என் கனவு. இன்றேல் பல்கலைக் கழகங்களும் சிலபல தமிழமைப்புக்களும் தமிழ் வள்ளல்களும் செல்வர்களும் ஆர்வலர்களும் இவ் ஆக்கப் பணிகளில் ஈடுபடுவர் என்பது என் நம்பிக்கை. எல்லோரும் புறக்கணித்தாலும், என்னாலியன்றதை, யானே தொடங்கி வைக்க, என்னால் முடியும்! இவை கற்பனை அல்ல; எதிர்காலவரலாறு!

தமிழண்ணல்

எழுதிய

எளிமைப் படுத்திய இலக்கண உரைகள்

நன்னூல் எழுத்ததிகாரம்	ரூ. 50
நன்னூல் சொல்லதிகாரம்	ரூ. 60
யாப்பருங்கலக் காரிகை	ரூ. 60
தண்டியலங்காரம்	ரூ. 50
நம்பியகப் பொருள்	ரூ. 90
புறப்பொருள் வெண்பா மாலை	அச்சில்

நடைமுறைப் பயன்பாட்டு இலக்கணம்

தமிழில் அடிக்கடி நேரும் பிழைகளும் திருத்தமும்	ரூ. 20
பிழை திருத்தும் மனப்பழக்கம்	ரூ. 20
சொல் புதிது சுவை புதிது	ரூ. 20
தமிழ் உயிருள்ள மொழி	ரூ. 20
பேசுவதுபோல் எழுதலாமா?	ரூ. 25
தமிழ்த்தவம் - ஆக்கப் பணிகள்	ரூ. 20
இனிய தமிழ் மொழியின் இயல்புகள் I, II, III	ரூ. 9

குடியரசுத் தலைவர் அ.ப.ஜெ. அப்துல் கலாம்

உங்களுக்கு ஒரு வேண்டுகோள்!

திருக்குறள் இந்தியாவின் ஒரு நல்வழி நூல். அதற்குப் பல உரைகள் உண்டு. பல மொழிபெயர்ப்புகள் உண்டு. ஆனால் உலக அளவிலே சாக்ரடீஸ், கன்பூசியஸ், பிளாட்டோ, அரிஸ்டாடில் போன்ற அறிஞர்களின் கருத்துக்கள் மேற்கோள்காட்டிப் பேசப்படுவதுபோல், திருக்குறள் பேசப்படுகிறதா என்பது சிந்தனைக்குரியது.

திருக்குறளை நாம் போற்றுகிறோம். உலக அறிஞர்களின் வரிசையில் திருவள்ளுவரும் கம்பரும் இளங்கோவடிகளும் புறநானூற்றுக் கவிஞர்களும் அவ்வையாரும் ஒளிவிட்டுச் சுடர்வீசத் தகுதிபெற்றபோதும், இவர்களை யாரும் அவ்வளவாக மேற்கோள் காட்டுவதாக எனக்குத் தோன்றவில்லை.

இது குறித்து நீங்கள் கலந்துரையாட வேண்டும் என்பது எனது விருப்பம். இது பற்றிய உங்களது சிந்தனைகளை அறிய விரும்புகிறேன்.

அமெரிக்க நாட்டில் நடந்த திருக்குறள் மாநாட்டிற்குத் தில்லியிலிருந்து, தொலைக்காட்சித் தொடர்புவழி ஆற்றிய உரையின் ஒரு பகுதி (15.7.2005)